www.tamilarangam.net

தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# வெளிச்சம்

விடுதலைப்புலிகள் கலை,பண்பாட்டுக்கழகம்



தமிழீழத்
தேசியத் தலைவரின்
மாவீரர் நாள் செய்தி

பிரம்மஞானியின்
அபத்தமும் அர்த்தமும்

நா. யோகேந்திரநாதன்
நேர்காணல்

அடேல் ஆனின்
உடையாத விலங்குகள்

இயல்வாணனின்
சிறுகதை

சோ. கிருஷ்ணராஜாவின்
அமைப்பியல் வாதம்

மற்றும்
கவிதைகளுடன்
இன்னும் பலவும்

மார்கழி 1994
விலை 20/=

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மெல்ல இமைதிறந்து
வானரசன் சிரிக்க,
கலவிமயக்கம் கலையாத
பூமியின்மேனி புல்லரித்துப் போகிறது.
ஆகாயநாயகனின் வருடலில்
நிலமடந்தை நாணிக்கிடக்கின்றாள்.
'போதும் எழும்பு' என்று
கோவில்மணி தட்டிக் கேலி செய்கிறது.
மார்கழிமாதக் குளிர்மேகம் வந்து
மஞ்சள் பூசிக் குளிப்பாட்டிவிட
நீர் சொட்டும் கூந்தலிலே
முற்றத்தில் பூத்த மல்லிகையை
அள்ளிச்சொருகி அழகாய் வருகின்றாள்.
கண்ணுள்ள எல்லோரும் பாருங்கள்.
எங்கள் மண் எவ்வளவு அழகானவள்.
உடல்கீறி விதைபோட்டால்......
உரமின்றி மரமாகும்.
கடல்மீது வலைபோட்டால்......
கரையெங்கும் மீனாகும்.
இவளின் சேலையைப்பற்றி
இந்தா ஒருவன் தெருவில் இழுக்கின்றான்.
பார்த்துவிட்டும் படுத்துறங்குபவனே!
நீட்டிப்படு.
உனக்கும் நெருப்பூட்டிக் கொளுத்த
அவனுக்கு வசதியாக இருக்கட்டும்.
'ரோஷ' நரம்பை
யாருக்கு விற்றுவிட்டுப்
பேசாமற் கிடக்கின்றாய்?

— மாலிகா —

www.tamilarangam.net


# வெளிச்சம்

மார்கழி : 1994

இதழ் : 32


எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு தஞ்சைப் பெருநகரில் நடைபெறுவதற்கான 'தடல் புடல்' ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. ஏற்கனவே, தமிழகத்தின் முதலமைச்சர்களாக அறிஞர் அண்ணாவும் எம். ஜி. இராமச்சந்திரனும் இருந்தபோது சென்னையிலும் மதுரையிலும் இவ்வாறான தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெற்றிருந்தன. இன்று செல்வி ஜெயலலிதாவின் ஆட்சியில், அவரது தலைமையில் எட்டாவது மாநாடு நடைபெறவிருக்கின்றது. இந்தவேளையில் ஏற்கனவே நடைபெற்ற ஏழு மாநாடுகளையும் நினைத்துப் பார்க்கும்போது நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடும், மாநாட்டுச் சம்பவங்களுமே முதன்மையானதாக வருகின்றன. இந்தமாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறுவதையும், தமிழர்களின் மொழி, பண்பாடு, தனித்துவம் என்பனவற்றையும் ஏற்காத இன்றைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் சிங்கள அரசு, அன்று தமிழாராய்ச்சி மாநாட்டைக் குழப்பியதுடன் மனிதப்படுகொலைகளிலும் ஈடுபட்டது. இதன்மூலம் ஈழத்தமிழர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் வெளியுலகுக்கும் புலப்பட்டன.

நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் சம்பவங்கள் தந்த விளைவுகளாக ஈழத்தமிழர்களின் எழுச்சி ஏற்பட்டது; தமிழர்கள் தங்கள் மொழி, பண்பாடு, தனித்துவம், மற்றும் வாழ்வுக்கான ஏனைய உரிமைகளையும் மீட்பதற்கான தேவையை வலியுறுத்திப் போராட்டத்தின் பால் அவர்களைத் திசைதிருப்பியதும் குறிப்பிடத்தக்கது. இன்றைய எங்களின் போராட்டம் உலகின் திசையெங்கும் ஓங்கி ஒலிக்க அடியெடுத்துக் கொடுத்ததும் அந்த மாநாடுதான்.

இதைத் தவிர, நடந்து முடிந்த ஆறு மாநாடுகளும் விளைச்சல் எதுவுமற்று வெறுமனே 'கூடினோம்–கலைந்தோம்' என்ற அளவிலேயே நடந்துமுடிந்தன. ஏட்டுச் சுவடிகளை யானைகளின்மேல்ஏற்றி ஊர்வலம் போனதும், மின்விளக்குகளால் 'இந்திரபுரி' யென மண்டபங்களையும் வீதிகளையும் அலங்காரம் செய்ததும் 'தமிழுக்கு வாழ்வு வந்துவிட்டது' என்றதொரு பிரமையை உலகுக்கு ஏற்படுத்த முனைந்ததும் ஆடம்பரக்காரர்களில் விழா ஏற்பாட்டாளர்களை அணிவகுக்கச் செய்ததுமன்றி வேறெதையும் இந்தியாவில் நடைபெற்ற இரண்டு மாநாடுகளும் செய்யவில்லை. இதை நாங்கள் சொல்லவில்லை. முன்னர் இந்த இரண்டு மாநாடுகளுக்கும் சென்று, கலந்து கொண்டு திரும்பிய இலங்கைப் பிரதிநிதிகளான பேராசிரியர்களும் எழுத்தாளர்களும் அறிஞர்களுமே எமக்குச் சொன்னார்கள். இவர்களே இன்று செல்வி ஜெயலலிதா தலைமையில் நடைபெறவிருக்கும் எட்டாவது மாநாட்டுக்கும் வெகு ஆர்வமாகச் செல்வதற்குத் தயாராகி வருகிறார்கள்.

எமது மொழியை, மொழியின் தொன்மையை, அது பெற்றிருக்கும் வாழ்வை, வளர்ந்து வரும் வழித்தடத்தை, பிறமொழிகளின் வளர்ச்சியில் எமது மொழியின் பங்களிப்பை, உலகம் முழுதும் இருந்து அறிஞர்கள் கூடிப் பேசுவதும், வாதிடுவதும் பெருமைக்குரியதுதான்; போற்றப்பட வேண்டியதுதான். இதில் இரண்டுபட்ட கருத்து வெளிச்சத்துக்குக் கிடையாது. ஆனால், இவர்கள் எல்லோரும்கூடி அங்கு விவாதித்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கப்போகும் பொருள் என்ன? அதனால் பெறப்போகும் விளைச்சல் என்ன? ஏற்கனவே நடைபெற்ற ஏழு மாநாடுகளும் எமக்கு என்ன நம்பிக்கையைத் தந்தன?

கோடிக்கணக்கான பணத்தைச் செலவிட்டு கூடிக்கலையத்தான் இந்த மாநாடு வழிசெய்யுமானால், அதை பிரயோசனமற்ற பெருவியத்தமாகவே நாங்கள் கருதுகின்றோம்.

தமிழகத்தின் இப்போதைய முதலமைச்சர், தான் கலந்து கொள்ளும் சிறுவிழாக்களைக்கூட பெருவிழாக்களாக்குவதில் புகழ்பெற்றவர். தனது தோற்றத்தைப் பெரிதுபடுத்துவதற்காக நாளொரு விழா எடுப்பதில் சரித்திரம் படைப்பவர். இவர் உலகம் எங்கணுமிருந்து அறிஞர்களை அழைத்து நடாத்தும் இவ்விழாவை எவ்வளவு ஆடம்பரமாக நடாத்துவார் என்பதை நாமறிவோம். மாநாடு நடைபெறும் தஞ்சாவூருக்கு

வீதி அமைக்க 50 கோடி ரூபா

கழிப்பிடம் அமைக்க 20 கோடி ரூபா

விருந்தாளிகளுக்கான ஐந்து நட்சத்திர ஹோட்டல்களுக்கு 100 கோடிரூபா

என்று தமிழின் பேரால் பணம் வாரி இறைக்கப்படுகின்றது. இதனை அங்குள்ள சமூக உணர்வுள்ள பத்திரிகைகளெல்லாம் கண்டித்தும் வருகின்றன.

இந்த வசதிமழையில் நனைவதற்காகவே இங்கிருந்தும் பிரதிநிதிகள் செல்வதானால் அதை வெளிச்சம் வித்தியாசமானதாகவே பார்க்கும். ஆனால் தமிழீழத்தின் பிரச்சினைகளை, எமது போராட்டத்தை, இங்கு பெரிய அளவில் முளைவிட்டுவரும் தமிழ்வளர்ச்சியைத் திட்டமிட்டு கருக்கிவரும் ஸ்ரீலங்காப் பேரினவாத அரசின் அடக்குமுறையை அங்கு சொல்வதற்கு இங்கிருந்து செல்லும் ஒருவராவது முயன்றால், அது வரவேற்புக்குரியதும் இங்கிருந்து செல்வதின் பெறுமானத்துக்குரியதுமாகும். இதைவிட்டு, 'சங்ககாலம்', 'பல்லவர்காலப் பனுவல்கள்', 'பக்தி இலக்கிய முத்துக்கள்' என்ற வகையான தலைப்புகளில், பொருள்களில் இனியும் பேசிவிட்டு வருவதானால் அதில் அர்த்தமேயில்லை.

எமது போராட்டத்தையும் புலர்ந்து வரும் புதிய எழுச்சியையும் அங்கே கூறமுடியாதென்றோ, இதற்கான சூழ்நிலை அங்கு இல்லையென்றோ காரணம் கூறி தப்ப முயல்பவர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையில் எமது பிரச்சினையை எடுத்துரைத்த திரு. வைகுந்தவாசன் அவர்களின் துணிவையும் நேர்மைத் திறனையும் நினைவூட்டுகின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சருகாக நெரிபட்ட தமிழனை மலையாக நிமிரச் செய்தவர்கள் மாவீரர்கள்

## எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்றைய நாள் மாவீரர் நாள்.


இன்றைய நாளை நாம் எமது தியாகிகளின் திருநாளாக, எமது தேசத்தின் பெருநாளாக, எமது போராட்டத்தின் எழுச்சி நாளாகக் கொண்டாடுகிறோம்.

எமது தேசம் விடுதலைபெறவேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, தன்னாட்சி உரிமைபெற்று தன்மானத்துடன் வாழவேண்டும் என்ற உயரிய இலட்சியத்திற்காகத் தமது இன்னுயிரை ஈகம்செய்த எம்முயிர்ப் போராளிகளை, நாம் எமது இதயக் கோவிலில் பூசிக்கும் புனித நாள் இன்று.

உலக வரலாற்றில் எங்குமே, எப்பொழுதுமே நிகழ்ந்திராத அற்புதமான தியாகங்கள் இந்த மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன. மனித ஈகத்தின் உச்சங்களை எமது போராட்ட வரலாறு தொட்டுநிற்கிறது. இந்த மகோன்னதமான தியாக வரலாற்றைப் படைத்தவர்கள் எமது மாவீரர்கள்.

விடுதலை என்பது ஒரு அக்கினிப் பிரவேசம்; நெருப்பு நதிகளை நீந்திக் கடக்கும் நீண்ட பயணம்; தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம். இந்த விடுதலை வேள்விக்கு தமது உயிரை ஈகம் செய்தவர்கள் மாவீரர்கள்.

தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீர மரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது; அடிமைத்தனத்தின் அமைதியைக் குலைத்துக்கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந்தான்; அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுங்காலமாகத் தூங்கிக்கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக்கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்.



தமிழீழத் தேசியத் தலைவர்
**திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

எமது விடுதலைக் காப்பியத்தின் ஒவ்வொரு அத்தியாயத்திலும், ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு பந்தியிலும் எமது மாவீரர்களின் தியாக வரலாறு நெருப்பு வரிகளால் எழுதப்பட்டிருக்கிறது.

விடுதலைக்காக, எமது தேசம் மதிப்பிடமுடியாத பெருவிலையைக் கொடுத்திருக்கிறது; விடுதலைக்காக, இந்த மண்ணில் இரத்த ஆறு ஓடியிருக்கிறது; விடுதலைக்காக, இந்தப் பூமி ரணகளமாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாறியிருக்கிறது; விடுதலைக்காக, எமது வீரர்கள் இன்றும் செத்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்த நிலத்தில் புதையுண்டிருக்கும் ஆயிரமாயிரம் சமாதிக் கற்களும் விடுதலையையே குறியீடுசெய்து நிற்கின்றன. வீதிகளில், சந்துகளில், சுவர்களில் நாம் சந்திக்கும் மாவீரர்களது திருவுருவங்களும் விடுதலையின் சாட்சிகளாகவே எமக்குக் காட்சிதருகின்றன.

விடுதலை என்ற இலட்சியத்தை நாம் இலகுவாகத் தேர்ந்தெடுக்கவில்லை; வரலாறுதான் அதை எம்மிடம் கட்டாயமாகக் கையளித்தது; சுதந்திரம் வேண்டுவதைத் தவிர வேறு வழி எதையும் வரலாறு எமக்கு விட்டுவைக்கவில்லை; ஓயாத புயலாக வீசிய ஒடுக்குமுறையின் கோரத்தாண்டவம் விடுதலைப் பாதையில் எம்மைத் தள்ளிவிட்டது. இன அழிப்பின் தாங்க முடியாத நெருக்குவாரங்களின் விளைவாக, நாம் ஒரு விதிசெய்துகொண்டோம்; எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கத் தீர்மானித்தோம்; விடுதலைபெற்ற மனிதர்களாக வாழ்வதற்கு நாம் முடிவுசெய்துகொண்டோம்.

விடுதலை நோக்கிய எமது இலட்சியப் பயணம் ஆரம்பமாகி, நீண்ட காலம் ஆகிறது. இந்த நீண்டபயணத்தில் நாம் எத்தனையோ சவால்களையும் சோதனைகளையும் சந்தித்துவிட்டோம். எத்தனையோ சக்திகள் எமக்கு எதிராகக் கிளர்ந்தன; எமது வல்லமைக்கு மிஞ்சிய வல்லாதிக்க சக்திகளும் எமக்கு விரோதமாக எழுந்தன. எமது பாதைக்கு முன்னே பாரிய முட்டுக்கட்டைகள் போடப்பட்டன; எமது பாதையிலிருந்து எம்மைத் திசை திருப்ப எத்தனையோ சூழ்ச்சிகள் செய்யப்பட்டன; போகும் வழியெல்லாம் பொறிகள் வைக்கப்பட்டன. சமாதானச் சதிவலையில் நாம் சிக்கிவிட மறுத்தபோது, போர் என்ற பூதம் எம்மீது ஏவப்பட்டது. நாம் உறுதி தளராது நின்றோம்; பாதை விலகாது பயணத்தைத் தொடர்ந்தோம்.

நீண்ட காலமாக எமது இலட்சிய உறுதியுடன் மோதியவர்கள் இன்று, தோல்வியைச் சந்தித்து நிற்கின்றனர்; சிங்களப் பேரினவாத அரசியலும் இன்று ஆட்டங்கண்டு நிற்கிறது. உறுதியான ஒரு போராட்ட சக்தியை எத்தகைய பலத்தாலும் வெற்றிகொள்ள முடியாது என்பதை, இன்று சிங்கள தேசம் உணரத் தொடங்கியுள்ளது. இந்த விழிப்புணர்வால் தென்னிலங்கையில் பெரியதொரு அரசியல் மாற்றம் நிகழ்ந்திருக்கிறது; புதிய ஆணையுடன், புதிய அணுகுமுறையுடன் புதிய அரசு ஆட்சிபீடம் ஏறியிருக்கிறது.

சந்திரிகா அரசு சமாதானக் கரத்தை நீட்டியபொழுது, நட்புறவுடன் நாம் அதைப் பற்றிக்கொண்டோம்; நிபந்தனைகள் எதையும் விதிக்காமல், நிர்ப்பந்தங்கள் போடாமல் நாம் பேச்சுவார்த்தையில் பங்குபற்றினோம். முதற் கட்டமாகத் தொடங்கிய இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது, நாம் எமது மக்களின் நலன்களுக்கே முதன்மை கொடுத்தோம்.

முடிவில்லாமல் தொடர்ந்த அரச வன்முறை எமது தேசத்தின் முகத்தைச் சிதைத்துவிட்டது; சாவும் அழிவும், எண்ணில்லா இன்னல்களும், குடிபெயர்ந்த அகதி வாழ்வுமாக எமது மக்களின் அன்றாட சீவியம் பெரும் அவலமாக மாறியது; சாதாரண வாழ்வின் சாதாரண தேவைகள்கூட எமது மக்களுக்கு மறுக்கப்பட்டன; இயல்பான வாழ்விற்கு ஏதுவான எல்லாவற்றிற்குமே தடைகள் விதிக்கப்பட்டன; இதனால், எமது மக்களின் அன்றாட வாழ்க்கை ஒரு ஜீவமரணப் போராட்டமாக மாறியது.

பூதாகரமாக வளர்ந்துநிற்கும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் முதற்படியாக தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதை, பேச்சுகளின்போது நாம் வலியுறுத்தினோம். சிங்களப் பேரினவாத அரசுகள் தொடர்ச்சியாக இழைத்துவந்த கொடுமைகளுக்கு புதிய அரசு முதலில் பரி

www.tamilarangam.net



காரம் காணவேண்டும்; தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைகளை ஆராய்வதற்கு முன்னராக, எமது மக்களின் ஜீவாதாரப் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படவேண்டும்; சமாதான சூழ்நிலையை உருவாக்கி, தமிழர் மீதான தடைகளை நீக்கி, பொருளாதார வாழ்வைச் சீரமைத்து, இயல்பு நிலையைத் தோற்றுவிக்க அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தினோம்.

இயல்புநிலையைத் தோற்றுவிப்பதற்கு சந்திரிகா அரசு, இன்னும் உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கிவிடவோ, போக்குவரத்துப் பாதையைத் திறந்துவிடவோ அரசாங்கம் தயாராக இல்லை. இது ஒருபுறமிருக்க, இராணுவம் போர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்துகிறது; யுத்தத் தயாரிப்பு வேலைகளை தீவிரமாகச் செய்து வருகிறது; நவீன ஆயுதங்களை வாங்கிக் குவிக்கிறது. சமாதானம்பற்றிப் பேசிக்கொண்டபொழுதும் இராணுவத்தின் கரங்களைப் பலப்படுத்துவதிலேயே சந்திரிகா அரசு அக்கறை காட்டிவருகிறது.

தமிழர் பிரச்சினைக்கு சமாதான வழி மூலம் தீர்வு காண்பதை, சிங்கள இராணுவம் விரும்புவதாகத் தெரியவில்லை. இராணுவத்தின் விட்டுக்கொடாத கடும் போக்கும், போர் நடவடிக்கைகளும், யுத்தத் தயாரிப்பு வேலைகளும் இந்த உண்மையையே எடுத்துக்காட்டுகின்றன. சந்திரிகா அரசும் இராணுவ அணுகுமுறையைக் கைவிட்டதாகத் தெரியவில்லை; இராணுவத்தின் இறுக்கமான நிலைப்பாட்டிற்கு மாறாகச் செயற்படுவதையும் அரசு விரும்பவில்லை; இராணுவத்திற்கு எவ்வித அழுத்தம் போடுவதற்கும் தயாராக இல்லை. இப்படியான ஒரு நிலைமையில், சமாதான சூழ்நிலையோ இயல்புநிலையோ ஏற்படுவது இலகுவான காரியமல்ல.

இன்றைய நிலைமையில், சகல ஆட்சி அதிகாரங்களும் சந்திரிகா அரசிடம் கைமாறியிருக்கும் சூழ்நிலையில், அரசு வேறு ஆயுதப் படைகள் வேறு என்றோ, அல்லது அரசின் நிலைப்பாடு வேறு ஆயுதப்படைகளின் போக்கு வேறு என்றோ, பாகுபடுத்திப் பார்ப்பது தவறு. ஆயுதப் படைகள் அரசின் ஒரு அங்கம்; அரசின் நிலைப்பாட்டையே ஆயுதப்படைகள் பிரதிபலிக்கின்றன என்றே நாம் கருதவேண்டும். எனவே, அரசுக்கு சமாதானப் பாதையில் உண்மையான, நேர்மையான அக்கறை இருக்குமானால் ஆயுதப் படைகளையும் அந்த வழிக்கு இட்டுச்செல்வது சிரமமாக இருக்க முடியாது.

போர் நடவடிக்கைகளை நிறுத்துவதும், பொருளாதாரத் தடைகளை நீக்குவதும், போக்குவரத்துப் பாதையைத் திறப்பதும், கடல் வலயத் தடையை நீக்குவதும், அகதிகளை மீளக் குடியமர்த்துவதும் எல்லாமே ஆயுதப் படையினரின் நிலைப்பாட்டில் தங்கியிருக்கின்றன. ஆயுதப் படையினர் இறுக்கமான நிலைப்பாட்டைக் கடைப்பிடித்தால், அரசும் அதற்கு உடந்தையாக இருந்தால், எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குப் பேச்சு மூலம் தீர்வு ஏற்படுவது சாத்தியமில்லை. எமது மக்கள் இன்று எதிர்கொண்டுநிற்கும் சாதாரண பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாதுபோனால், மிகவும் சிக்கலான அடிப்படைப் பிரச்சினைகளை அரசினால் தீர்த்துவைக்க முடியுமா என்பது சந்தேகத்திற்கு இடமானதே.

நாம் சமாதானத்தின் பாதைக்கு இடையூறாக நிற்கவில்லை; நாம் சமாதானத்தின் கதவுகளைச் சாத்திவிடவும் இல்லை. நாம் சமாதானப் பேச்சுகளுக்கு தயாராகவே இருக்கிறோம்; பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடருமானால் நாம் அதில் பங்குகொள்வோம்.

எமது மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காணப்படவேண்டும் என்பதையே, நாம் விரும்புகிறோம். எமது மக்களின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெறுவதானால், சந்திரிகா அரசு, முதற்கட்டமாக எமது மக்களின் அவசரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு, தமிழர் தாயகத்தில் சமாதான சூழலையும் இயல்பு நிலையையும் தோற்றுவிக்கவேண்டும்.

தமிழரின் தேசியப் போராட்டம் நாற்பது ஆண்டு காலத்திற்கு மேலான நீண்ட, சிக்கலான வரலாற்றுச் சூழ்நிலைகளால் உருவாக்கப்பெற்றுப் பெருவளர்ச்சி கண்டிருக்கிறது. இன்று அதன் பரிமாணம் வேறு; வடிவம் வேறு. நீண்ட காலமாக இரத்தம் சிந்திப் போராடிய எமது இயக்கம், இன்று தமிழ்ப் பகுதிகளில் தன்னாட்சிக் கட்டமைப்புகளை நிறுவும் அளவிற்குப் போராட்டத்தை உயர்ந்த படிநிலைக்கு எடுத்துச்சென்றிருக்கிறது. இன்று நாம் மிகவும் பலமான, உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். இந்த வலுவான அத்திவாரத்தை இட்டுத்தந்தவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நாம் ஒரு பலமான சக்தியாக வலுவான தளத்தில் நிற்பதால்தான், சிங்கள அரசு எம்முடன் பேச்சுக்களை நடத்த விரும்புகிறது.

சமாதான வழியில், தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சந்திரிகா அரசு முயற்சிகளை எடுக்குமானால், நாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். தமிழரின் தேசியப் போராட்டத்தினது இன்றைய வளர்ச்சிக் கட்டத்தைக் கருத்திற்கொண்டு, உருப்படியான சுயாட்சித் தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படுமானால், நாம் அதனைப் பரிசீலனைசெய்யத் தயாராக இருக்கிறோம்.

எனது அன்பார்ந்த தமிழ் மக்களே!

நாம் விடுதலைக்காகப் போராடும் ஒரு மக்கள்—தேசம். நாம் சலுகைகளுக்காகக் கைநீட்டி நிற்கும் ஒரு சாதாரண கூட்டமல்ல; எத்தனையோ ஆண்டுகளாக, எத்தனையோ அழிவுகளைச் சந்தித்து, எத்தனையோ உயிர்களைப் பலிகொடுத்து, எத்தனையோ தியாகங்களைப் புரிந்து, எத்தனையோ நெருக்கடிகளை எதிர்கொண்டு, நாம் எமது போராட்டத்தை எமது இலட்சியப் பாதையில் முன்னகர்த்தி வருகிறோம். நாம் சிந்திய இரத்தமும் கண்ணீரும் வீண்போகவில்லை; இன்று எமது போராட்டம் தன்னாட்சியை நோக்கி வளர்ச்சியும் உயர்ச்சியும் கண்டுவருகிறது. ஒரு தொடர்ச்சியான, உறுதியான போராட்டத்தின் மூலமே நாம் இந்தக் கட்டத்தை எட்டிவிட முடிந்தது.

எமது தாயக மண்ணில், வரலாற்று ரீதியாக எமக்கு உரித்தான எமது சொந்த மண்ணில், நாம் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும் என்பதே எமது குறிக்கோள்; இதுவே எமது தேசத்தின் அபிலாசை. இந்தத் தேசிய அபிலாசையை நிறைவு செய்யும் ஒரு தீர்வையே நாம் வேண்டி நிற்கிறோம். அந்தத் தீர்வே நிரந்தரமான சமாதானத்தையும் தோற்றுவிக்கும். அந்தத் தீர்வு எமக்குக் கிட்டும்வரை, நாம் ஒன்றுபட்ட மக்களாக — ஒன்று திரண்ட தேசமாக – தளராத உறுதியுடன் இருக்க வேண்டும்.

இன்றைய தேசிய நாளில், எமது தேசத்தின் விடுதலைக்காக மரணித்த எமது மாவீரர்களை நாம் நெஞ்சில் நிறுத்தி நினைவுகூரும் இந்தப் புனித நாளில், நாம் எமது குறிக்கோளை உறுதியாகப் பற்றிக் கொள்வோமென உறுதிமொழி செய்வோம்.

சுதந்திரத்தின் ஆலயங்களான துயிலும் இல்லங்களில் ஈகத்தின் சுடரொளிகளை நாம் ஏற்றிவைக்கும்பொழுது, அந்த அற்புதமானவர்களின் ஆன்ம அபிலாசைக்கு நாம் செலுத்தும் காணிக்கையாக, இந்த உறுதிமொழியை நாம் செய்துகொள்வோமாக.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

(1994 மாவீரர் நாளை முன்னிட்டு தலைவர் அவர்கள் வழங்கிய செய்தி)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவிதை

ம. ஆனந்தன்

எழுதிய

# அறியாமைநோய் தீர்க்கும் அருமருந்து

பாரதியின் பாட்டெனக்கு விருந்தாகும்
பைந்தமிழர் நோய்க்கு நல்ல மருந்தாகும்
பேச்சென்று வந்தவர்கள் பேசட்டுமே,
பிறகென்ன 'ஹெலி' தொட்டுப் பார்ப்பதெல்லாம்
முறைகேடு ! முறைகேடு ! முறைகேடே ! !
முண்டாசுக் கவிஞனவன் நெருப்பானான்
வண்டமிழா வழிதவறிப் போவாயோ
வாய்விட்டுக் கதறுகிறான் சாற்றுகவி
''நெஞ்சு பொறுக்குதிலையே இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால் ''

போரென்றால் போரென்ற போக்கிரிகள்
போர்விட்டுப் பேச்சுக்கென இறங்கி வந்தார் !
'மூச்' சென்று முகம் இறுக்கி வெருட்டியவர் – இன்று
மூச்சுவிட முடியாமல் திணறுகின்றார் !
போச்சடா போச்சென்று கூவுகிறார் !– விடுதலையைப்
போட்டுடைக்க கோழைத்தனம் கூட்டுகின்றார் !
வெண்ணெய் திரண்டு வரும் போதினிலே !
விளங்காத மக்களின் செயலிதனால் - அந்தோ !
விம்முகிறான் வீரக்கவி:
''நெஞ்சு பொறுக்கு திலையே இந்த
நிலைகெட்ட தமிழரை நினைத்து விட்டால் ..''

நேற்று மட்டும் 'ஹெலி' எமக்கு எமனாமே !
நேரில் வந்து இறங்கி விட்டால் இனமாமோ ?
மாவீரர் கல்லறைக்குமலர் போட்டகைகள் – ஐயோ !
மாத்தமிழா ''நெஞ்சுபொறுக்கு திலையே – இதை
நினைத்து நினைத்திடின் வெறுக்கு நிலையே...''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "இயல்வாணனின்"

சிறுகதை

யாழ்ப்பாணப் பரவைக் கடல் தூங்கிக் கொண்டிருந்தது. கடல் நீரில் முகத்தைத அலம்பி விட்டு, கழுத்தில் சுற்றியிருந்த துவாயை இழுத்து முகத்தைத் துடைத்தான் றொபேட். பனிப்புகார் மண்டியிருந்தது. கிழக்கு வானம் இரத்தத்திட்டாய் உறைந்திருந்தது. புள்ளிகளாய் கரை நீளத்திற்குஆட்களும் கட்டு மரங்களும் .....

இரவு தொழிலுக்குப் போயும் எதுவுமில்லாமல் ஆகிவிட்டது. அகன்ற கடலையும், புகை மண்டித் தெரியும் இராணுவக் காவலரண்களையும் பார்த்தான். எரிச்சலாயிருந்தது.

□□

இரவு தொழிலுக்கு இவனுடன் அன்ரனும் வந்தான். இருவருமாக வலைகளைச் சரி செய்தனர். வலைகளில் அதிகம் சிக்குகள் இருந்தன. சில பிரிந்தும் போயிருந்தன. பொத்தல்களைத் தைத்து, சிக்கெடுத்து முடிய இருள் சூழ்ந்து விட்டது.

வெள்ளிகள் தெரியத் தொடங்க அவர்கள் புறப்பட்டனர். வானிலும், மண்டைதீவிலும் ஒளிப் பொட்டுக்கள் தெரிந்தன. இருள் மண்டி அச்சந்தருவதாய்க் கடல் நிசப்தமாயிருந்தது.

இவன் கட்டுமரத்தை வலித்தான். அன்ரன் சாய்ந்தபடி பேசாதிருந்தான்.



"என்ன யோசிக்கிறாய்?" குரலைத் தாழ்த்தி இவன் கேட்டான்.

## முடிந்த ஒரு இரவும் முடியாத ஒரு பகலும்

"ஒண்டுமில்லை"

'இப்பான் கட்டினவன் ... அதுக்கிள்ளை தொழிலுக்கு வந்திட்டான்'

திடீரென்று மண்டைதீவிலிருந்து இராணுவத்தினர் 'சேர்ச் லைற்' அடித்தார்கள். கடலெல்லாந் துளாவி, ஆங்காங்கு தெரிந்த கட்டு மரங்களையும் சிறு வள்ளங்களையும் ஊடுருவி வெளிச்சம் படர்ந்தது. இவனதுகட்டுமரத்தை வெட்டி வெளிச்சம் சென்றபோது அன்ரன் துடித்தெழுந்தான். கட்டுமரம் தள்ளாடியது.

வெளிச்சம் விழும்போதே கலிபர் தாக்குதலும் நடத்தப்பட்டது. இருளைக் கிழித்துக்கொண்டு எரிதணற் துண்டுகளாய் ரவைகள் பாய்ந்தபோது அன்ரனும் இவனும் கட்டு மரத்திலேயே குப்புறப் படுத்துக் கொண்டனர். இவன் நங்கூரத்தைப் பாய்ச்சினான். இரண்டு மூன்று ரவைகள் கட்டுமரத்தைத் தாக்குவது போல வரத் தொடங்கியதும் இருவரும் கடலில் குதித்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நீந்தும் போது அன்ரன் களைத்திருந்தான். பயமும் சேர அவன் மூச்சிழுத்து நீந்துவது இவனுக்குத் தெரிந்தது. அவனருகே வந்தான்.

''கஸ்டமாயிருக்கே ''

''இல்லை''

தலைக்குமேலால் ரவைகள் பறந்தன. ஒளி ஊடுருவிப் பாய்ந்தது. கரைக்கு நீந்தி வந்ததும் அன்ரன் ''அப்பாடா'' என்று பெருமூச்செறிந்தான். குளிரில் உடல் சிலிர்த்தது.

இவன் சேர்ட் பையுக்குள் இருந்த பீடிக்கட்டையும், தீப்பெட்டியையும் எடுத்தான். பொலித்தீன் பையையும் மேவி நீர் உட்புகுந்து அவை நனைந்திருந்தன. பீடியை எடுத்து வாயில் செருகினான். தீப்பெட்டியிலிருந்து குச்சியை உருவித் தட்டினான். அது இளகி இருந்தது. பையுக்குள் மீண்டும் போட்டுவிட்டுத் தலையைக் கோதினான்.

''சீ... இவங்களாலை நிம்மதியா ஒண்டுஞ் செய்யேலா '' ஒளிப்பொட்டுக்களாய்த் தெரிந்த மண்டைதீவுக் காவலரண்களைப் பார்த்தான். அன்ரன் வீட்டிற்குப் போய் தீப்பெட்டி எடுத்து வரும்வரை இவன் ஈரத்தலையைக் கோதிக் கொண்டிருந்தான். தீக்குச்சி உமிழ்ந்த நெருப்புமுகத்தில் பிரதிபலிக்கநெருப்பை மூட்டினான். இருவரும் பீடி புகைத்தனர்.

பிறைச்சந்திரன்மேலெழுந்து கொண்டிருந்தது. பீடிகளும் மாறிமாறிப் புகைந்து முடிந்திருந்தன. 'சேர்ச் லைற்' தொடர்ந்து அடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

இவன் பொறுமையிழந்து தவித்துக் கொண்டிருந்தான். அன்ரன் சீமெந்துக் கட்டில் படுத்திருந்தான். 'சேர்ச் லைற்' ஓய பிறைச்சந்திரன் உச்சிக்கு வந்திருந்தது.

அதன் பின்னர் இருவருமாக நீந்திக் கட்டுமரத்தருகே போனார்கள். ஆட்களின்றிப் பல கட்டுமரங்கள் நின்றன. சற்றுத்தூரத்திலும் யாரோ நீந்திச் செல்கிறார்கள்.

இவன் கட்டு மரத்துள் ஏற, அது சரிந்து ஆடியது. அன்ரனும் ஏறிக்கொண்டான். குளிர் உடலை நடுங்கச் செய்தது. இவன் வலைகளைச்சரிசெய்தான். அன்ரன் கட்டுமரத்தை வலித்தான். அருகருகே கட்டுமரங்களும், வள்ளங்களும் ஆட்கள் இன்றிப் பிணங்கள் போல் மிதந்து கொண்டிருந்தன.

திடீரென மண்டைதீவிலிருந்து ஏவப்பட்ட மூன்று எறிகணைகள் பேரொலியுடன் கடலில் வீழ்ந்து வெடித்தன. அவர்கள் அதிர்ச்சியுடன் குலுங்க, கட்டுமரம் ஆடியது.

அன்ரன் பயத்துடன் கட்டுமரத்தைக் கரையை நோக்கி வலித்தான்.

''ஏன்திருப்புறாய் அன்ரன்'' இவன் கத்தினான். அவன் முகத்தில் பயந் தெரிந்தது.

''அண்ணையாணை .. இனியும் நிக்கேலாது''

''உது இப்பநிண்டிடும். கொஞ்ச மீனெண்டாலும் பிடிச்சிட்டுப் போவம். கையிலை அஞ்சுசதம் காசுமில்லை. மனிசி இண்டைக்கோ நாளைக்கோ பிள்ளை பெறப்போறாள். கொஞ்ச நேரமெண்டாலும் பிடிப்பம்'' இவன்சொல்லி முடிக்கவும் மீண்டும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன.

''காசைநாளைக்கெண்டாலும் பாக்கலாம். உயிர்தான் பெரிசு. நீ வராட்டா விடு. நான் 'நீந்தியெண்டாலும் போறன்''

'இவனுக்கு குடும்பக் கஸ்டம் இன்னும் வரேல்லை'

''சரிவா'' வெறுப்புடன் சொன்னான். இருவருமாகக் கரைக்கு வந்தனர். மண்டைதீவுக் காவலரண்

www.tamilarangam.net



கள் கண்ணை உறுத்திக் கொண்டு ஒளிப்பொட்டாய்த் தெரிந்தன.

கட்டுமரத்தை இழுத்து விட்டதும் அன்ரன் வீட்டிற்குப் போனான்.

வன் கொஞ்ச நேரம் கரையில் நின்றுகடலையும், இராணுவக் காவலரண்களையும் வெறித்துப் பார்த்தான். பிரசவ நாளைஎதிர் பார்த்து பிள்ளை வயிற்றுடன் நிற்கும்மேரியின் முகம் நினைவில் வந்தது.

'இவன்களாலை நாங்கள் வாழேலாது சே,

சேர்ட் பையைத் தடவினான். வெறுமையாயிருந்தது. பின்னர் கட்டுமரத்தைத் தள்ளி விட்டு, அதிலேறி வலிக்கத் தொடங்கினான். அது ஊர்ந்து ஊர்ந்து போய்க்கொண்டிருந்தது. குளிரால் உடல் நடுங்கியது.

திடீரென்று ஏதோ சத்தம். முன்னால் போன வள்ளங்கள் அவசரத்துடன் திரும்பி வந்தன. அதிலிருந்தவர்களின் கலவரஒலி இவனுக்கும் கேட்டது.,இரண்டு கடற்படைப் பீரங்கிப்படகுகளின் இரைச்சல் கேட்பதாகபதட்டத்துடன் சொல்லியபடி அவர்கள் இவனைக் கடந்து சென்றனர். இவனுக்கும் நெஞ்சு படபடத்தது.

நிதானிப்பதற்குள் பீரங்கிப் படகுகளில் இருந்து ஏவப்பட்ட குண்டுகள் கிட்டவாக - கடலில் வெடித்தன. பதட்டத்துடன் இவனும் கட்டுமரத்தைத் திருப்பிக் கொண்டு கரைக்கு வந்தான். அதைத் தள்ளிவிட்டு, கரையில் சீமெந்துக்கட்டில் வந்தமர்ந்தான்.

சேர்ட் பையைத் தடவினான். வெறுப்புடன் கடலைப் பார்த்தான். ஒளிப் பொட்டாய்க் காவலரண்கள் தெரிந்தன. விடிவெள்ளி நன்றாக உயர்ந்து விட்டது. இன்றைய தொழில் பட்டு விட்டது. மேரிக்குப்பெறுமாசம் ஆசுப்பத்திரியிலை போட ஆன உடுப்பு இல்லையெண்டு கத்துறாள். சாமானுகளும் முடிஞ்சுதாம். கடைக்காரனிட்டைப் போக, கடனே நீட்டுதாமெண்டு தரானாம் என்ன செய்யிறது?

ஒளி உமிழும் காவலரண்களைஅடித்துநொருக்க வேண்டும் போலிருந்தது.

"இவங்களாலை தான் எல்லாம்... இங்கையிருந்து துலைக்க வேணும்''

கரையில் தூரத்தே கதைத்துக் கொண்டு பலர் நின்றனர். பிடித்து வந்த கொஞ்ச மீன்களை, வலைகளை விரித்து பறியுள் போடுவது தெளிவற்றுத் தெரிந்தது.

இவனது கண்கள் இருண்டன. இரவு சாப்பிடாதது வயிற்றில் புகைந்தது துவாய்த் துண்டைத் தலையில்மூடிவிட்டு, சீமெந்துக் கட்டில் படுத்தான். பெருமூச்சு வெளிப்பட்டது.

முகத்தைத் துடைத்து விட்டுக் கரையேறினான். நேரே தெரிந்த துறையில் நான்கைந்துபேர் தூண்டில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்களை நோக்கி இவன் நடந்தான். இங்கால் பக்கமாக மரியதாசும் சூட்டும் இருந்தனர். சூரிய ஒளியில் அவர்களது முகங்கள் மஞ்சளடித்து இருந்தன.

இவனைக் கண்டதும்,

''என்னபடேல்லையே'' என்று மரியதாஸ் கேட்டான். இவன் வெறுமையுடன் தலையாட்டினான்.

''இரவு சத்தங் கேக்கையே நான் நினைச்சனான் தொழில் படுமெண்டு...''

தூண்டில் ஆடியது. பிறகு இழுத்தது.

''வலிக்குது, இளன்''

மரியதாஸ்சுண்டிவிட்டு இழுத்தான். 'ஓரா' ஒன்று திமிறியபடி தரையில் வீழ்ந்தது. புள்ளிகளும் வரிகளுமாய்க் கொஞ்சம் பெரியது. சூட் அதை எடுத்து ஒரு கையால் பிடித்தபடி அதன் வாய்க்குள் குச்சியை விட்டுத் துளாவினான். அதன் நாக்குக்குக் கீழிருந்து வெள்ளைப் பூச்சியொன்று விழுந்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தது. ஓராவைத் தூக்கிப் பறியுள் போட்டு விட்டு, பூச்சியை எடுத்து தூண்டிலில் குத்தி விட்டான்.

''சூட் அந்த ஓராவை றொபேட்டண்ணையிட்டைக் குடு. கொண்டு போகட்டும்'' சூட் அதைத் தூக்கிக் கொடுத்தான்.

''ஏன்.. உனக்கே காணாது'' என்றபடி இவன் அதை வாங்கிக் கொண்டான். கைக்குள் கிடந்து அது துடித்தது.

நேரே நடந்து போய் குறுக்காக இறங்கும் பாதையால் சென்றான். நான்கு எட்டு வைத்தால் வீடு வருகிறது. இவன் சாரத்தை மடித்துப் பிடித்தபடி நடந்தான். வீட்டிற்கு வந்த போது அது பூட்டியிருந்தது.

''ஏ, புள்ள.. எங்கை போய் நிக்கிறாய்?''

''.........''

இவன் பின் பக்கமாகப் போனான். அங்கிருந்தபடி பலமுறை கூப்பிட்டான். அதன் பின்னர்தான் தூரத்தில் ''ஓய் வாறன்'' என்ற குரல் கேட்டது. பிலோமினம்மா வீட்டடியில் தான் குரல் கேட்கிறது.

''இவளுக்கு எந்த நேரமும் ஊரலட்டல் தான்'' பின்பக்கத்தில் கட்டி நின்ற ஆடு இவனைப் பார்த்து அழுதது.

மேரி வருவது தெரிந்தது. அவள் முன் தள்ளும் வயிற்றுடன் றெஜியைத் தூக்கிக்கொண்டு வந்தாள். அவளின் பின்னால் நான்கு பிள்ளைகளும் வந்தனர். வெளியைத் தாண்டி வரும் போதே இவன் பேசினான்.

''எங்கையடி பிள்ளையளையும் கூட்டிக்கொண்டு திரியுறாய்.

வீட்டுவேலை செய்யாமல் விடிஞ்சாப் பொழுது பட்டால் ஊரலட்டித் திரிஞ்சாக் காணுமே''

''ஐயோ ஒரு சொட்டரிசியுமில்லாமல் புள்ளயள் கத்துதெண்டு புலோமினம் மாட்டப் போய் வாங்கியாறன் நீங்கள் வாங்கித் தந்தனீங்களே சும்மா சொல்லிக் கொண்டிருந்தால் காணுமே நாங்களென்ன சாகிறதே'' அவள் பொரிந்துகொண்டு வருவதை இவன் ஆத்திரத்துடன் பார்த்தான்.

அவள் உள்ளே போனாள். இவனும் பின்னால் போய்

''இந்தா'' என்று ஓராவை நீட்டினான்.

''இது மட்டும் இருந்தாக் காணுமே?''

''பின்னஎதுவேணும்''

''தூளில்லை.. புளியில்லை..''

''அப்ப பொரிச்சு விடன்''

''எண்ணையிருந்தாலெல்லோ''

''அப்ப என்னதான் வச்சிருக்கிறாய்..'' ஆத்திரம் வார்த்தைகளில் புரண்டது.

''வாங்கித் தந்தாலல்லோ...! பெண்ணாப்பிறந்த நாங்கள்தான் வீடுவழிய கடன் வாங்க வேண்டிக் கிடக்கு'' இவன் அவளை முறைத்துப் பார்த்தான். மீசை நடுங்கியது.

''இவளவு நாளும் ஆரடி வேண்டித்தந்தவன்'' கைகள் இரண்டு மூன்று முறை அவளது முதுகில் இறங்கி ஏறின. அவள் ''ஐயோ'' என்று அலறினாள். சத்தங் கேட்டு அன்னம்மாக்கா ஓடி வந்தாள்.

''ஏன்ரா, உனக்கென்ன நடந்தது.. ஏனவளை அடிக்கிறாய்'' இவன் ஆத்திரம் மாறாமலே விலகினான்.

''உதுகளோடை இருக்கிற நேரம் இல்லாமல் இருந்திடலாம்'' அவளுக்குக் கேட்ககூடியதாகச் சொன்னான். பின்னர் அறைக்குள் நுழைந்து தூண்டிலையும் நூலையும், எடுத்துக்கொண்டு போனான். பின்னால் ''அப்பா நானும் வாறன்'' என்றபடி மூத்தவன் வந்தான்.

''வேண்டாம்... நீ போ'' இவனது அதட்டலில் அவன் திரும்பிச் சென்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



றான். இவன்நேரே போய்த் துறையில் குந்திக் கொண்டான். நூலைக்கட்டி தூண்டிலைச் சரி செய்தான். பக்கத்தில்நிக்கலஸ் தூண்டிலை நீருக்குள் புதைத்து விட்டுக் காத்திருந்தான். அவனிடம் வெள்ளைப் பூச்சியொன்றை வாங்கிக்குத்தி விட்டு, தூண்டிலை நீருள் அமிழ்த்தினான். கட்டை நீரில் மிதந்தது.

சூரியன் மேலே எழுந்து கொண்டிருந்தது. புகை விலகி, தார்ப் பீப்பாக்கள் போன்று மண்டைதீவு இராணுவக் காவலரண்கள் தெரிந்தன. தலையைத் திருப்பிக் கொண்டான்.

கடல் மெல்ல முனகிக் கொண்டிருந்தது. நூல்ஆட, கட்டை தளம்பியது. இவன் இழுத்தான். சின்னக்கருந் திரளியொன்று துடித்து வீழ்ந்தது. தூண்டிலிலிருந்து அதனைக் கழற்றிப் பையுள் போட்டான். மீண்டும் தூண்டிலை இறக்கி விட்டு, தூண்டில் தடியை நிலத்தில் வைத்துஅடிக்காலால் அமத்திப் பிடித்தான். பசித்தது நிக்கலஸிடம் பீடியொன்றை வாங்கிப் புகைத்தான்.

கொஞ்சம் கழிய, மூத்தவன் வந்தான்.

''மீன் பொரிச்சுப் புட்டும் அவிச்சாச்சாம் .. அம்மா வரட்டாம்''

இவன் அவனைப் பரிவுடன் நோக்கினான்.

''ம்... நீ போ''

அவன் நின்று இவன் மீன் பிடிப்பதைப் பார்த்தான்.

''நிக்காத .. மண்டைதீவிலையிருந்து சினைப்பர் அடிப்பன்''

அவன் இருந்தான். இவன் திரும்பினான்.

''சொன்னாக் கேக்க வேணும். போராசா! நான் நாலைஞ்சு மீன் புடிச்சு சந்தையிலை வித்திட்டு வந்திடுறன் எண்டு அம்மாட்டைச் சொல்லு''

அவன் எழுந்து போனான். இவன் தூண்டில் ஆட, அதை இழுத்தான்.

□□

இவன் தூண்டிலைக் கழற்றி நூலைச் சுற்றிக் கொண்டு எழுந்த போது சூரியன் இன்னும் மேலெழுந்திருந்தது. தவிர்க்க முடியாதபடி காவலரண்கள் பார்வையில் பட்டன. வானில் உலங்கு 'வானூர்தி ஒன்றின் உறுமல் கேட்டது.

இவன் சந்தைப் பக்கமாக பையைத் தூக்கிக் கொண்டு நடந்தான். 'இண்டைக்கு விலையாயிருக்கும்... இருநூறாவது கிடைக்கும்' வேகமாக இவன் நடந்து கொண்டிருக்கும் போது, மேலே குண்டு வீச்சு விமானமொன்று பறந்தது.

சற்று நேரத்தில் குண்டு வெடித்து அதிர்ந்தது. இவன் திக்கித்து நின்றான். பிறகு சந்தையை நோக்கி நடந்தான்.

''எங்கைவிழுந்தது ''  என்றபடி சிலர் போனார்கள்.

இவன் சந்தையடிக்குக் கிட்டப் போகும் போது விமானம் கீழே குத்தியது. இவன் பையைக் கீழே போட்டுவிட்டு, நிலத்தில் படுத்துக் கொண்டான். பயத்தால் உடல் நடுங்கியது. மீண்டும் ஒரு குண்டு வெடித்து அதிர்ந்தது.

கலவரத்துடன் பலர் ஓடி வந்தார்கள். 'என்ன' என்று விசாரிக்கக் கூட முடியாமல், அலறியடித்தபடி பரபரப்புடன் அவர்கள் இவனைக் கடந்து ஓடினர். அன்ரனும்பாய்ந்து விழுந்து வந்தான். இவன் பையைத் தூக்கிக் கொண்டு எழுந்து குந்தியிருந்தான்.

''எங்கை அன்ரன்?''

''சந்தையடியிலை ..... திருப்பியும்அடிக்கப்போறான் .. ஓடிவா'' அவன் ஓடிப் போய்விட்டான். இவன் கொஞ்ச நேரம் நின்று விட்டு மீண்டும் திரும்பி நடந்தான்.

ஊரே கலவரப்பட்டுக் கொண்டிருந்தது. பீதியுடன் எல்லாரும் வீடுகளை விட்டு வெளியே வந்து நின்றனர். இவன் கரை அரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கால் நடந்து சென்று, வீட்டிற்குச் செல்லும் பாதையில் இறங்கினான்.

ஒழுங்கை முழுவதும் சனக் கூட்டமாயிருந்தது. எல்லோரும் இவனை அனுதாபத்துடன் பார்த்தனர். பல பெண்கள் இவனைக் கண்டதும் தலையைக் குனிந்து கொண்டும், திருப்பிக் கொண்டும் நின்றனர். இவன் பையையும் தூக்கியபடி சாதாரணமாக நடந்து வந்தான்.

வீட்டடியில் பெருங் கூட்டம் நின்றது. இவனைக் கண்டதும் அழுதபடி ஓடி வந்தான் மரியதாஸ்.

''ஏன்ரா அழுகிறாய் என்ன நடந்தது?'' கேட்கும் போது அவன் இவனைக் கட்டிப் பிடித்தான்.

''காலமை ஒரு மீன் தந்தனே அவளிட்டக் குடுத்துக் காச்சிச் சாப்பிடெண்டு... எல்லாம் வீணாப் போச்சுதே,றொபேட்டண்ணை'' அவன் ஒப்பாரி வைத்து அழுதான்.

''ஐயோ மேரியக்காவும் பிள்ளையளும் போயிட்டினமே'' அவனது அழுகை கரைய முன்னமே, அவனிலிருந்து பிரித்துக்கொண்டு ஓடினான். மீன்பை தூரத்தில் எகிறி விழுந்து, மீன்கள் சிதறுண்டன.

வீட்டருகேவந்தபோது, வீடு கற்குவியலாகக் கிடந்தது. எல்லாமே சிதறியிருந்தன. அடையாளங் காண முடியாதபடி மேரியும் பிள்ளைகளும் சதைத்துண்டங்களாக உருக்குலைந்துகிடந்தனர். இவன் குழற முடியாமல் திக்கித்துப் போய் நின்றான். உடலில் மின் வெட்டியது. தலை சுழன்றது இவன் அப்படியே சரிய, யாரோ தாங்கிப் பிடித்தனர்.

□□

எழும்பிய இவனை மரியதாஸ் சரித்து வளர்த்தினான். ''கொஞ்ச நேரம் ஆறிக்கொண்டிரு'' என்றான் அவன். இவனுக்குக் கண் நிறைய நீர் வந்தது. விக்கி விக்கி அழுதான். நீண்டநேரமாக, மரியதாஸின் தேற்றலையும் மேவி அழுதான்.

''எல்லாமே போயிட்டுது இனியென்ன இருக்கு'' என்று அழுகையினூடே சொன்னான். எழுந்தான். மரியதாஸ் தடுக்க, ''வேண்டாம்'' என்றபடி வெளியே வந்தான்.

''எங்கைபோறாய் ''

''வீட்டடியைப் பாத்து வாறன்''

''பிறகு பாக்கலாம்''

''இல்லை, இப்ப பாக்கப் போறன்''

விடு விடென வீதியில் இறங்கி வீட்டடிக்குப் போனான்.

அழகான வீடு கற்குவியலாய்க் கிடந்தது. அக்கம் பக்கத்து வீடுகளும் இடிந்து இருந்தன. சதைக் குவியல்களைக் காணவில்லை. விம்மி விம்மி அழுதான். அழுதபடி பின்பக்கம் போனான். எந்த நேரமும் 'ம்மேய்' என்றழைக்கும் ஆடும் இறந்து கிடந்தது. அதன் கழுத்திலிருந்து பெருகிய இரத்தம் நிலத்தில் சிவப்பாய்உறைந்திருந்தது. கிட்ட வந்து இவன் ஆட்டைத் தடவினான். சில கணங்கள் அப்படியே இருந்தான். பின்னர் அதன் கழுத்தில் இருந்த கயிற்றைக் கழற்றினான். கழற்றிய கயிற்றைப் பின் மாமரத்தில் கட்டிச் சுருக்குப் போட்டான். கீழேயொரு வட்டச் சுருக்கிட்டான். அதற்குள் தலையை நுழைத்தான்.

''ஐயோ... என்னண்ணை செய்யுறாய்'' என்று அலறியபடி மரியதாஸ் ஓடி வந்தான். அவனின் பின்னால் நான்கைந்து பேர் ஓடி வந்தனர் சுருக்கை அவிழ்த்து அதிலிருந்து இவனை விடுவித்தனர். விடுவிக்கும் போது—

''என்னை விடுங்கோ .. அவளையும் பிள்ளையளையும் விட்டிட்டு என்னாலை இருக்கேலாது. என்னை விடுங்கோ'' என்று கத்தினான். திமிறினான். பிறகு விம்மல்வெடிக்க,அழுதான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மரியதாஸ் இவனைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கூட்டி வந்தான். பின்னால் அன்ரன் வந்தான். இருவருமாகக் கூட்டிச் சென்று அன்ரன் வீட்டில் இருக்க வைத்தனர். அன்ரனின் மனைவி இவனைக் கண்டதும் அழுதபடி பின்னால் சென்றாள்.

''அழுது அவரைக் கலக்காமல்சுறுக்காகோப்பி போட்டா'' அன்ரன் அவளைப் பார்த்துச் சொன்னான்.

அவள் முகத்தைத் துடைத்தபடி கோப்பியைப் போட்டுக் கொண்டு வந்து இவனிடம் நீட்டினாள். இவன் குனிந்தபடியே வேண்டாமென்றான்.

அன்ரன் அதை வாங்கி பருக்கி விட்டான்.

''நீ சாகிறதாலை உனக்கு என்ன வரப்போகுது''

'' ஏன் றொபேட்டண்ணை .. நாங்கள் உங்களைப் பாக்க மாட்டமே? நீ சாகிறதாலை குண்டு போட்டவனுக்குத் தான் லாபம் எங்களுக்கு நீ இல்லாட்டி எவ்வளவு நட்டந் தெரியுமே ..'' மரியதாஸ் இவனது தலையைத்தடவி விட்டான்,

''அண்ணையாணை.... கர்த்தர் மேலாணை உப்பிடியொரு முடிவுக்கு இனி வராதை இது எவ்வளவு கோழைத்தனந்தெரியுமே.. இப்பிடி வீணா உயிரை விடுகிறதே... எங்கை சத்தியஞ் செய்து தா''


''......''

நீண்ட நேரத்தின் பின் நிமிர்ந்தான். சத்தியம் செய்து தந்தான்.

''நீஎங்கையும்போ வேண்டாம் .. எங்களோடை இரு'' அன்ரன் சொன்னான். □□

□□ □□ □□

# கலி!



த. ஜெயசீலன்

சுண்ணத் தரைகிண்டிச் சோதித்து,
மண்புரட்டிச்
சின்னஞ் சிறுநாற்றைச் 'சீட்டுவைத்தான்.'
கண்ணின்,
ஆழத்தால் காணா... அடிநீரை மோந்தெடுத்து
பாலாய்ப் பயிர்வாயில் பாய்ச்சிவிட்டான்.
கோடை,
வெயிலில் வியர்த்தான்.
விழுநீரை வேரிடையே
உயிரின் விலையென்றே ஊற்றிநின்றான்.
பயிரும்,
அந்தோபார்...! ஆஹா... அழகாக 'ஆடி'வரும்,
பந்திக்காய்ப் பச்சை படைக்கிறது!
சிந்திப்பான்,
காலை, அயலூரின் 'கந்தன்' மணி... எழுப்ப
மேலே முடிந்த முடிச்சுடனே...
காளை...,
அவிழ்த்து அணிவகுப்பான்!
அந்த ஒலிகிளம்பிப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புலிக்கு இசைக்கூட்டப் புல்லரித்து
கவிதை
வாய் விட்டு நூறு வடித்து,
பயிரணைத்து,
"நோயென்ன?" கேட்பான் நோகாமல்
மேய்கின்ற
மாட்டைத் தடவி மனம்போல மேயென்பான்!
தோட்டத்தைக் காலைக் குளிப்பாட்ட...
பாட்டோடு
ஏறித்துலாவில் ஏகாந்தம்பேச, நெற்றி
பீறும் வியர்வை பிளிந்தெறிந்து
'சோறை'
நாளை தரவல்ல நாற்றுகளைக் காதலிப்பான்!
நீளும் நிழலில் அயர்ந்து
கூழை
பாணிப் பினாட்டோடு...
பல்லினிக்கத் தின்று விட்டுக்
காணி முழுதுங் கருத்தோடு
நாணி இருள்
தீண்டும் வரைக்குந் திகட்டாமல் மெய்சிலிர்த்து
மீண்டும் அதேநினைவில் மூழ்கிடுவான்.
யாண்டும்,
இந்தச் சுகமெல்லாம்.. எம்மண்ணில்
நேற்றுவரை
வந்த சுவர்க்கத்தின் வாரிசுவே! 'பந்த'
வெளிநாட்டுக் காசெங்கள்
வீடெல்லாந் தேங்கியதால்
பொலிவிழந்து போச்சின்றெம் ஊர்!
வலிமை
கெட்டுக் களைத்து
'கூப்பனினாற்' சோம்பலுற்றுப்
பட்டுப் பொசுங்கிற்றெம் பயிர்!
சுட்டு
நிவாரணங்கள் எம்மைநிமிராமற் செய்ததனால்
சுவாசிக்கச் சோர்ந்திற்றெம் உயிர்!
'அவாவில்'
ஆடி அயல்தேடி
'ஆதாரம்' விட்டதனால்
காடாகிப் போச்சாம் 'கலி'! □

www.tamilarangam.net



# காரணம் கூறிவிடு

**பொன்னிலா**




நில் அலையே!
நீட்டுயர்ந்து ஆர்ப்பரிப்பதன்
காரணம் நீ கூறிவிடு.
காலநதி கலக்கும் உன்னுடலில்
கரும்புலிகள் கரைந்ததை
எண்ணி எண்ணி
பொங்குகின்றாயா;
பொங்கும் அலையோடு
பெருமிதம் கொள்கின்றாயா ?
நில் அலையே!
நீட்டுயர்ந்து ஆர்ப்பரிப்பதன்
காரணம் நீ கூறிவிடு
வண்ணமலர் பின்னும் கரம்
வலிமை பெற்று போனதையா;
வரிப்புலியுடன் கரும்புலி
எரிமலையாய் எழுந்ததையா;
எதையெண்ணிப் பொங்குகின்றாய்?
நில் அலையே!
நீட்டுயர்ந்து ஆர்ப்பரிப்பதன்
காரணம் நீ கூறிவிடு.
“மல்லர் நாம்” என
மார் தட்டி வந்த
‘சுப்படோரா’வும்
சுக்கலாகிப் போனதையா ...?
எதையெண்ணிப் பொங்குகின்றாய்?
நில் அலையே!
நீட்டுயர்ந்து ஆர்ப்பரிப்பதன்
காரணம் நீ கூறிவிடு.
மங்கை (யும்) நளாயினியுடன்
வாமனும் லக்ஸ்மனும்
கற்பிட்டிக் கடலினிலே
கலந்து மறந்ததையா;
எதை எண்ணி பொங்குகின்றாய்?
நில் அலையே!
நீட்டுயர்ந்து ஆர்ப்பரிப்பதன்
காரணம் நீ கூறிவிடு.
எழுத முடியாத
எழுத் தோவியங்கள்
உன் உடலில்
உருப் பெற்றதையா
அன்றி ...
உறவுகள் தனை மறந்து
சுதந்திரமே மூச்சென்ற
உத்தமர் குருதியினை
உன்னகத்தே கொண்டதை
எண்ணி எண்ணி
ஏங்குகின்றாயா ...
பொங்கும் அலையோடு
பெருமிதம் கொள்கிறாயா?
நில் அலையே!
நீட்டுயர்ந்து ஆர்ப்பரிப்பதன்
காரணம் நீ கூறிவிடு!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நேர்காணல்

### திரு. நா. யோகேந்திரநாதன்

நேர்முகம்

**கருணாகரன்**



● எழுபதிலும் அதற்கு முன்னைய காலகட்டத்திலும் கலை இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்ட படைப் பாளியாக தங்களை இனங் காட்டியுள்ளீர்கள். அதற்குஅப்பாலும்சென்று தங்களின் தோற்றுவாயையும், தொடர்ந்து தங்கள் இளமைப்பராயத்தையும் இளைய தலைமுறையினரும் அறியத்தக்கதாகத் தாருங்கள்?

□ எனது தந்தையார் ஒரு அரசாங்க ஊழியராகவிருந்த காரணத்தினால் எனது சிறுவயதில் அனுராதபுரத்திலும், 1958 ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலம் எனது சொந்தக்கிராமமான கரணவாயிலும் வாழவேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனது தந்தையார் திரு. நாராயணபிள்ளை ஒரு தொழிற்சங்கவாதியாகவும், இடதுசாரி அரசியலில் நாட்டமுடையவராகவுமிருந்தார். எனது தாயார் திருமதி இராசம்மா நிறைய வாசிக்கும் பழக்கம் உள்ளவர். இதனால் எனக்கு ஒரே நேரத்தில் அரசியலிலும், இலக்கியத்திலும் ஈடுபாடு கொள்ளக்கூடிய சூழ்நிலை ஒன்று ஏற்பட்டது. நானும் இன்னும் சில மாணவர்களுமாகச் சேர்ந்து எட்டாம் வகுப்பு படிக்கும் போது 'மாணவன்' என்று ஒரு பத்திரிகை வெளியிட்டோம். முதல் வெளியீட்டுடன் பத்திரிகை தனது ஆயுளை முடித்துக் கொண்டுவிட்டது. ஏனெனில் தொலைந்து விட்டது என்று வீட்டில் பொய்கூறிவிட்டு மோதிரத்தை விற்று அடுத்த இதழை வெளியிட என்னிடமோ என் நண்பர்களிடமோ வேறு மோதிரம் இருக்கவில்லை. இச்சூழ்நிலையில் எனது கவனம் நாடகங்களின் பக்கம் திரும்பியது. எனது குரு என்று நான் பெருமையுடன் சொல்லிக் கொள்ளுமளவுக்கு இத்துறையில் திரு. எம்பெருமான்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறுகதை, நாடகம், கவிதை, விமர்சனம் என்று 1970 களில் மிகவும் அறியப்பட்ட படைப் பாளியாக விளங்கிய கிளிநொச்சி, திருவையாறைச் சேர்ந்த **திரு. நா. யோகேந்திரநாதன்** இடையில் நீண்ட காலம் எழுத் துத்துறையில் இருந்து ஒதுங்கி இருந்தார். பின்னர், தமிழீழ விடுதலைப் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்த 1985ல் இருந்து தமிழரின் தேசிய இனப் போராட்டத்தின் நியாயத்தை உளமார ஏற்று அதற்கு உறு துணையாக கலை, இலக்கியங் களில் கவனத்தைச் செலுத்தி வருகின்றார். இடதுசாரி இயக் கங்களுடன் மிகவும் ஈடுபாடுடை யவராக இருந்த இவர் தமிழர் களின் உரிமைப் போராட்டத் தின் பால் ஈர்க்கப்பட்டது ஒரு வரலாற்று நிகழ்வு என்று பெரு மைப்படும் வேளையில், தற் பொழுது ஈழநாதம் (வன்னிப் பதிப்பு) பிரதம ஆசிரியராக பணி புரிந்து அதன் வளர்ச்சிக்கு மூல காரணர்களில் ஒருவராக உழைத்து வருகிறார்.

அவர்கள் எனக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். இந்நாட்களில் எனது பாடசாலையான உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியில் 'பண்டைத்தமிழர் பண்பாட்டு நாள்' கொண்டாடியமைக்காக நானும் முன்னின்று செயற்பட்ட இன்னும் எட்டு மாணவர்களும் தண்டனைக்கு உட்பட்டது மறக்கமுடியாத அனுபவம். அந்நாட்களில் பாடசாலைக்கு நீலக்காற்சட்டை வெள்ளை சேட்டுடன் தான் செல்லவேண்டும். வேட்டி சேட்டுடன் சந்தனப் பொட்டு வைத்துப் பாடசாலைக்கு சென்றால் தண்டனை வாங்கத்தானே வேண்டும். பின்பு எனது உயர்தர (A/L) கல்விக்காக நான் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சேர்ந்த பின்பு 'ஈழநாடு' பத்திரிகையுடன் தொடர்பு ஏற்பட்டது. எனது முதலாவது சிறுகதையே ஏதோ ஒரு போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றது. இச்சம்பவம் ஏற்படுத்திய உற்சாகத்தில் ஈழநாடு வீரகேசரி, தமிழின்பம் போன்ற பத்திரிகைகளுக்கு சிறுகதைகள் எழுத ஆரம்பித்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இக்காலகட்டத்தில்தான் இரு குறுநாவல்களையும் எழுதினேன். இச்சந்தர்ப்பத்தில் என்னுள் இருந்த அரசியல் ஆர்வம் செயலுருவம் பெறத்தொடங்கியது. 'கம்யூனிஸ்ட் கட்சி'யில் உறுப்பினராக இணைந்து கொண்ட நான் முதல்முறை ஏ. எல் பரீட்சையை எழுதியதுமே முழுநேர ஊழியராகப் பணியாற்ற ஆரம்பித்தேன். கம்யூனிஸ்ட் கட்சியின் (சீனசார்பு) வடபிரதேச வாலிபர் சங்கச் செயலாளராகப் பணியாற்றிய நான் கிளிநொச்சி மாவட்டத்தில் அரசியல் வேலை செய்வதற்காக 1966 ல் அனுப்பப்பட்டேன். இக்காலகட்டத்தில் இடம்பெற்ற தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டேன். அப்போதுதான் முதன்முதல் கவிதை, இசைப்பாடல் ஆகிய துறைகளில் என் ஆர்வம் திரும்பியது.

1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆயுதப் போராட்டத்தின்பால் கம்யூனிஸ்ட் கட்சியை நகர்த்த நான் எடுத்த முயற்சிகளும் தயாரிப்புகளும் என்னைப்பல பிரச்சனைகளுக்குள் தள்ளின. வெளியே பொலிஸாரின் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்த அதே வேளையில் கட்சிக்குள்ளே 'அதிதீவிரவாதி'யென்றும் 'நக்ஸலைட்' என்றும் முத்திரை குத்தப்பட்டு ஒதுக்கப்பட்டேன். இது என்னைக் கட்சியை விட்டு வெளியேறும் நிலைக்குத் தள்ளியது. 1971லிருந்து 1982 வரையிலான காலப்பகுதியில் என்கவனம் வானொலி நாடகங்கள் எழுதுவதிலேயே கழிந்தது. 1982ம் ஆண்டு எனக்கு 'விடுதலைப் புலிகளு'டன் ஏற்பட்ட தொடர்பு காரணமாக எனது எழுத்தின் பார்வை தமிழீழத் தேசியத்தின்பால் திரும்பியது. 'ஈழமுரசு' சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற ஒரு சிறுகதையைத் தவிர வேறு எந்த ஆக்கமும் 1982-1990 காலப்பகுதிகளில் வெளிவந்ததாக நினைவில்லை. 1990க்குப் பிற்பட்ட காலத்தில் விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தில் இணைந்து பணியாற்ற ஆரம்பித்த பின்பு சிறுகதை, கட்டுரை கவிதை, நாடகம், இசைப்பாடல்கள் வீடியோப்படத்துறை எனப்பல துறைகளிலும் ஈடுபட்டு வருகிறேன். அது மட்டுமின்றி 'வெளிச்சம்' பத்திரிகையில் பணியாற்றுவதற்கும் 'புலிகளின் குரல்' வானொலிக்கு நிகழ்ச்சிகளைத் தயாரிக்கவும் வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தன. தற்சமயம் 'ஈழநாதம் வன்னிப்பதிப்பி'ன் பிரதம ஆசிரியராகப் பணியாற்றுகிறேன்.

● ஒரு காலத்தில் எல்லோரையும் போலவே; இலங்கை ஒரு நாடு; என்ற தேசியச் சூழலில் சிக்குண்டவர்களில் தாங்களும் ஒருவர். அதிலிருந்து தமிழ்த்தேசியத்தின்பால் தங்களைத் திருப்பிவிட்ட காரணிகளைத் தரமுடியுமா?

□ ஏகாதிபத்தியம் என்றுமில்லாதவாறு இன்று தன் கரங்களை அகல விரித்துள்ளது. சுரண்டலின் பிரதான வடிவம் இன்று தேசிய ஒடுக்குமுறையாக மாற்றமடைந்துள்ளது. தேசிய இனங்களின் தனித்துவங்களையும் கலாசார அடிப்படைகளையும் அழிப்பதன் மூலமும், ஒரு உதிரிச்சமூக கட்டமைப்புகளை உருவாக்குவதன் மூலமும் தமது உலகில் பரந்த சந்தையை உருவாக்கி வருகின்றனர். எம்மை ஒடுக்குவதற்கான யுத்தங்களால் பெரும் ஆயுத வியாபாரத்தையும், அடக்கி எம்மைச் சீரழிப்பதனால் எமக்கு அந்நியமான பொருட்களை எம்மீது திணித்து லாபம் பெறவும் விளைகின்றனர். இதற்குப் பேரினவாதிகள் கருவியாக உபயோகப்படுத்தப்படுகின்றனர். எனவே

www.tamilarangam.net



எமது தனித்துவத்தைப் பேணி, ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவமைக்க எமக்கு ஒரு தேசம் அவசியமாகிறது. 1982ம் ஆண்டு முதன்முதலில் நான் 'ரஞ்சன் லாலா'வைச் சந்தித்தபோது இந்நோக்கை நிறைவேற்ற வல்லமையுள்ள நேர்மையான, கட்டுப்பாடு பொருந்திய ஒரு இயக்கம் 'விடுதலைப்புலிகள்' மட்டுமே என்பதைப் புரிந்து கொண்டேன். நாம் சில புத்தகங்களையும், தத்துவங்களையும், அரசியல் பிரச்சனைகளையும் வைத்து சில விஷயங்களைக் கணிப்பிட்ட போதிலும் தேசிய விடுதலை இயக்கமும் அதற்கு விடுதலைப்புலிகள் தலைமைதாங்குவதும் ஒரு இயல்பான வரலாற்று நிகழ்வு என்பதை தொடர்ந்து நடந்த இனக்கலவரங்களும் இன ஒடுக்கு முறைகளும் நிரூபித்தன. எவ்வித குழப்பத்திற்கும் ஆட்படாமல் விடுதலைப்புலிகளின் செயற்படும் ஆதரவாளனாக மாறினேன்.

● ஈழநாதம் (வன்னிப்பதிப்பு) தினசரியின் பிரதம ஆசிரியராகப் பணி புரியும் தாங்கள் இன்று முகிழ்ந்து வரும் வன்னி இலக்கிய முயற்சிகளை இனங்கண்டுகொண்டிருப்பீர்கள் தாங்களும் ஒரு இலக்கியப் படைப்பாளி என்ற ரீதியில் இந்த இலக்கிய முயற்சிகள் பற்றித் தங்கள் கருத்துகளை அறிய விரும்புகிறோம்?

□ அ. பாலமனோகரன், தாமரைச்செல்வி விவேக், ச. முருகானந்தன், மணலாறு விஜயன், வவுனியா திலீபன், அகளங்கன் ஆகிய படைப்பாளிகள் வன்னி மண்ணில் ஏற்கனவே இனங் காணப்பட்டுள்ளனர். ஆனால் ஒரு புதிய எழுச்சியும் உழைக்கும் வர்க்கத்திற்கேயுரிய உத்வேகமும் விஷயங்களை ஆழமாகவும் அடிப்படை வரையும் சென்று பார்க்கும் துடிப்பும் கொண்ட இளைய தலைமுறையினரின் படைப்புகள் எம்மைப் பிரமிக்க வைக்கின்றன. ஈழநாதம் வன்னிப்பதிப்பு வாரமஞ்சரியின் உதயத்தின் பின்பு ஒரு புதிய எழுச்சி உருவாகியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. அங்கதன், செம்மலையூரான், வதனா, செ. விவேக், தயா பொன்னையா, பெரு. கணேசன், மணலாறுமங்கை, அ. முருகேசு ஆகியோரும் இன்னும் பலரும் சிறுகதைத் துறையில் நல்லதொரு எதிர்காலத்தை நோக்கி வளர்ச்சியடைந்து வருகின்றனர். இதே போல் கவிதைத் துறையிலும் சிவஜெயா, சஞ்சயன், கவிப்பிரியா, சுதாகர், சிவாஞ்சலி போன்றோர் ஒரு புதிய வீச்சுடன் முன் வந்து கொண்டிருக்கின்றனர்.

● யாழ். குடாநாட்டுக்குள் எழுப்பும் இலக்கியக் குரல்கள் உலகத்தின் திசைகளைச் சென்றடைவதுபோல் தமிழீழத்தின் மற்றைய இடங்களில் எழுந்து வரும் கலை இலக்கியக் காற்று வெளியே வீசத்தவறுகிறது இதற்கான காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்?

□ ஒரு படைப்பின் காத்திரத்தன்மையை வெளிப்படுத்துவதும் அப்படைப்புக்கு ஒரு இலக்கிய அந்தஸ்தைத் தருவதும் விமர்சனங்கள் (பேச்சளவில் என்றாலும் கூட), என்றே நான் கருதுகிறேன். யாழ்குடாநாட்டுக்குள் உள்ள எழுத்தாளர்களும், 'விமர்சகர்களும் தடித்த புகழுரைகளையோ கண்டனங்களையோ இந்த எல்லைக்குள்ளேயே நடத்தி முடித்துவிடுகிறார்கள் குடாநாட்டுக்கு வெளியேயுள்ள எழுத்தாளர்களின் படைப்புகள் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இவர்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பார்வைகள் வெவ்வேறு திசையிலிருப்பினும் இதுவும்கூட ஒருவித குழுமனப்பான்மையே. இன்றைய சர்வதேச, தேசிய சூழ்நிலைகள் யாழ்குடாநாட்டின் ஊடாகவே சர்வதேச வாசகர்களைச் சென்றடைய வேண்டியுள்ளது. இந்நிலையில் யாழ்குடாநாட்டில் அங்கீகாரம் பெறாத இலக்கியக்காற்று எவ்வாறு வெளியே வீசமுடியும்? எனினும் 'வெளிச்சம்' மூலம் சில



குடாநாட்டுக்கு வெளியேயுள்ள எழுத்தாளர்கள் வெளி அரங்கிற்கு அறிமுகப்படுத்தப்பட்டதை மறுப்பதற்கில்லை. ஆனால் பெருமளவில் குடாநாட்டுக்கு வெளியேயுள்ள புதிய எழுச்சியை ஏற்கனவே முத்திரை குத்தப்பட்ட இலக்கியவாதிகள் அங்கீகரிக்கவில்லையென்றே சொல்ல வேண்டும். எப்படியிருப்பினும் எமது தேசிய விடுதலைப் போராட்டம் இப்புதிய மலர்களின் சுகந்தத்தை எட்டுத்திக்கும் கொண்டு செல்லும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

● 50ம் ஆண்டுகளிலிருந்து கலை இலக்கியத்தின் சகலகூறுகளுடனும் தாங்கள் சம்பந்தப்பட்டுள்ளீர்கள். தங்களால் படைக்கப்பட்ட, எழுதப்பட்ட கலை இலக்கியப் படைப்புகளை 'வெளிச்சத்துக்குக்' கூற முடியுமா?

❑ கலை இலக்கியத் துறையில் எனது ஈடுபாடு ஒரு நீண்ட காலகட்டத்தை உள்ளடக்கியது. எனவே சகலவற்றையும் நினைவுகூர்ந்து இங்கே கூறுவது சாத்தியமில்லை. ஆனால் சில குறிப்பிடத்தக்கவற்றை மட்டும் கூறுகிறேன். எனது முதற் சிறுகதை 'விடிவிளக்கு'. மற்றும் இருசிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்றுள்ளேன். மேலும் 'தகவம்' தனது காலாண்டுத் தெரிவில் 'அவள் அக்காவாகி விட்டாள்' என்ற எனது சிறுகதையை முதலாவதாகத் தெரிவு செய்தது. கவிதைகளில் 'செத்துப்போனவர்க்கும், சாகப்போபவர்க்கும்' குறிப்பிடத்தக்கது. 'வெளிச்சத்தில்' எமது மண்ணின் பாரம்பரியங்கள் சம்பந்தமாகவும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தினூடாக எமது பண்பாடுகள் காப்பாற்றப்படுவது பற்றியும் எழுதிய கட்டுரைகள் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளன. 1963, 1964 காலப்பகுதிகளில் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த 'வானத்தாமரை' குறுநாவல் மிகவும் புகழ் பெற்றிருந்ததை மறுக்கமுடியாது. நாட்டுக்கூத்துத் துறையில் எனது 'வெற்றிக்களத்தில் வீரவேங்கை' என்ற படைப்பு 300க்கு மேற்பட்ட தடவைகள் மேடையேறின. நாடகத் துறையிலும் 'கேள்விகள், கேள்விகள், கேள்விகள், 'வியர்வைத்துளிகள்'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பன மிகவும் மக்கள் ஆதரவைப் பெற்றன. வானொலி நாடகத் துறையில் முப்பதுக்கு மேற்பட்ட நாடகங்களை நான் எழுதிய போதும் 'காட்டுநிலா' என்ற நாடகம் என் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும். வீடியோத்துறையில் 'சுழியோட்டம்' 'எதிர்காலம் இருளல்ல', 'சந்தனமரம்' ஆகிய படங்களைத் தயாரித்துள்ளேன். அண்மையில் வெளியான 'எல்லைக் கற்கள்' படத்திற்கு திரைக்கதை அமைத்து வசனம் எழுதியுள்ளேன்.

● கணிசமான காலம் வெளிச்சத்தின் ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் வெளிச்சத்தை உருவாக்கிய கரங்களுக்குரியவர்களில் ஒருவராகவும்பணி புரிந்தீர்கள். அந்த அனுபவத்தினூடாக தமிழீழப் போராட்டத்தை கலை இலக்கியப் படைப்பாளிகள் பதிவாக்கியதில் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதைக் கூறமுடியுமா?

□ நாம் இந்த இலக்கில் முழுமையான வெற்றி பெற்றுவிட்டோம் என்று சொல்லமுடியாது. 'வெளிச்சம்' இந்த நோக்கத்தில் கூடியவீதம் வெற்றியீட்டியிருந்தாலும் கூட ஏனைய சஞ்சிகைகள் இதில் ஆற்றிய பங்கு நிறைவானது என்று சொல்லி விட முடியாது. எமது பெயர்பெற்ற எழுத்தாளர்களில் பலர் மக்கள் மத்தியிலுள்ள முரண்பாடுகளையே கதைக்கருவாக எடுத்தாள்கின்றனர். ஆனால் இன்று எமக்கும் எதிரிக்குமிடையேதான் பிரதான முரண்பாட்டுக்களம் விரிந்து கிடக்கிறது. இப்பிரதான முரண்பாட்டை இலக்கியத்தின் அடிப்படையாகக் கொண்டோமானால் அதன் வீச்சில் இரண்டாம் தரமுரண்பாடு தானாகவே செயலிழந்து போவதை அவதானிக்கலாம். நாம் இரண்டாம் தர முரண்பாட்டைப் பெரிது படுத்துவதனால் பிரதான முரண்பாடு மறைக்கப்படும் அபாயம் உண்டு. மேலும் தென்னிந்திய புதியவகை இலக்கியங்களின் பிரதிபலிப்பும் இங்கே விளைவதற்கான சில அறிகுறிகளும் தென்படுகின்றன. 'மனிதத்தின் தேடல்' என்ற போர்வையில் விரக்தியை விதைக்கும் அத்தகைய படைப்புகள் எமது போராட்ட வாழ்வுக்கு ஊறு செய்பவை எனவே நான் கருதுகிறேன். ஆனால் குறிப்பிட்ட ஒன்றிரண்டு கவிஞர்கள் எவ்வாறு புதுக்கவிதையை எமது தேசவிடுதலைப் போருக்கு உரமாக்கலாம் என்பதையும் சில புதிய எழுத்தாளர்கள் நவீன சிறுகதை வடிவத்தை எவ்வாறு சரியான திசைமார்க்கத்தில் பிரயோகிக்கலாம் என்பதையும் நடைமுறையில் நிரூபித்துள்ளனர். எனினும் எமது படைப்பாளிகள் எமது போராட்டத்தையும் போராட்ட வாழ்வையும் ஆழ்ந்து நோக்குவதன் மூலம் இச்சாதனையை நிறைவு செய்ய முடியும். நடன நாடகத்துறையிலும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவை எமது மக்களின் குறைபாடுகளைக் 'கிண்டல்' செய்வதிலேயே கவனம் செலுத்துகின்றன. அல்லது கலைத்துவம் இல்லாத 'ஏ.கே யையும் கண்ணிவெடி'களையுமே கதாநாயகர்களாகக் காட்டும் படைப்புகளையே மேடையேறுகின்றன. இத்துறையில் நாம் வெகுதூரம் முன் செல்ல வேண்டியுள்ளது. அதேவேளையில் எமது நவீன வளர்ச்சிப் போக்குகள் மக்களிலிருந்து அந்நியப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

● இன்று புதிதாக முகிழ்ந்து வரும் நவீன கலை இலக்கியங்களின் பங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கும் பணியும் பற்றிஉங்கள் கணிப்பை எமக்குத்தர முடியுமா?

☐ இது பற்றி முன்னைய பதிலிலேயே சில விஷயங்களைக் கூறிவிட்டேன். எனினும் மேலும் சில அபிப்பிராயங்களை முன்வைக்கலாம் எனக் கருதுகிறேன். உலகம் கலை இலக்கியத்துறையில் வளர்ச்சியடையும் போது நாமும் அதற்கேற்ப வளர்ச்சியடைந்தேயாக வேண்டும். ஆனால் நவீன உலகின் யந்திரமயவாழ்வும், குடும்ப உறவுகளாலும் பாரம்பரிய மரபுகளாலும் பின்னப்பட்ட எமது வாழ்வும் வெவ்வேறானவை. வாழ்வு எப்படியோ கலை இலக்கியமும் அவ்வாறே அமையவேண்டும். எமது கலை, இலக்கியத்தில் பயன்படுத்தப்படும் படிமங்களும், குறியீடுகளும், நவீன உத்திகளும் எமது மக்கள் மத்தியிலிருந்தே தேடியெடுக்கப்பட வேண்டும். ஆனால் அந்தத் தேடலுக்கான பரப்பளவைப் பலர் குறுகியவட்டத்திற்குள் நிறுத்தி விடுகின்றனர். இதன் பரப்பளவு அகலிக்கப்பட வேண்டும். ஆழச்சுழியோடவும் வேண்டும். 'நுனிப்புல் மேயாமல்' மக்களின் அடிப்படை உணர்வுகளையும், விடுதலைக்கான தாகத்தையும் சரியான முறையில் இனங்கண்டு படைப்புகள் மூலம் மக்கள் விளங்கும் மொழியில் (முறையில்) அழகுபட நவீன உத்திகளுடாக வெளிக்கொண்டு வரவேண்டும்.

● 'எல்லைக்கற்கள்' என்ற எமது வீடியோ நாடாவின் கதை வசன கர்த்தா என்ற முறையில் வேறுசில ஒளிப்படத்தயாரிப்புகளில் உங்களுக்குப் பங்கிருப்பதாலும் தமிழீழத்தின் ஒளிப்பட வளர்ச்சி பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

☐ சரியான திசையில் முன்னேறி வருகிறோம் எனவே நான் கருதுகிறேன். குறிப்பாக 'காற்றுவெளி', 'பிஞ்சுமனம்' 'தாயகக்கனவு' என்பன ஒரு குறிப்பிட்ட தரத்தை எட்டியுள்ள அதே வேளையில் இந்திய வியாபாரப் படங்களிலிருந்து மக்களைச் சரியான ரசனையை நோக்கித் திசைதிருப்பவும் வல்லவை. எனினும் வேறுசில படங்கள் ரசிகர்களை அதிசயங்களைப் பார்த்து பிரமிக்கும் வெறும் பார்வையாளர்களாக மாற்றும்



முறையில் அமைந்திருந்தது. வரவேற்புக்குரியதல்ல; அத்துடன் 'அன்னை பூபதி' 'மேஜர் கிண்ணி' சம்பந்தப்பட்ட இருபடங்களையும் இன்னும் திறம்படச் செய்திருக்கலாம் என்ற கருத்து என் மனதிலுண்டு. அளப்பரிய பணியாற்றிய இத்தியாகிகளின் வரலாறு படமாக்கப்படும்போது நிறைய ஆய்வுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அவர்களுக்குரிய தனித்துவங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும். சர்வதேசச் சந்தையைக் கைவசம் வைத்திருக்கும் ஆங்கிலப்படத் தயாரிப்பாளர்களே எவ்வளவு நீண்டகால முயற்சியில் 'காந்தி' படத்தைத் தயாரித்தார்கள். எமக்கு இவை வெறும் படங்களல்ல; எமது காலத்தின் பதிவும் கூட. எனவே இப்படியான தயாரிப்புகளை ஆழமான, நுண்ணிய ஆய்வுகளின் பின்பு மேற்கொள்வதே பொருத்தமானது. மேலும் 'இது எங்கள் தேசம்' படத்தில் அன்னைபூபதியை விட இந்திய இராணுவக் கொடுமைகளுக்கு முக்கியத்துவமளிக்கப்படுகின்றது. 'இன்னும் ஒரு நாடு' படத்தில் மேஜர் கிண்ணியின் தனித்துவத்தை விட 'சண்டைக்கே' பிரதான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இவை சரியான வழிமுறையாக எனக்குப் படவில்லை.

● எம்மண்ணின் பண்பாட்டு மரபில் ஆழ வேரோடி நிற்கும் நாட்டாரியல் கூறுகள் தங்களின் படைப்புகள் அனைத்திலும் அநேகமாகத் தலை காட்டி நிற்கின்றன. அதைப்பலர் அனுபவித்தும், ரசித்தும் கூறியதையும் அறிந்துள்ளோம். இதற்கான காரணியின் பின்புலத்தைச் சொல்லுங்கள்:

☐ எனது சொந்த இடமான கரணவாயில் நான் கழித்த இளமைக்காலம் என்றைக்குமே என்னால் மறக்கப்பட முடியாதது. அங்கு நான் வாழ்ந்த காலத்தில் கிராமியக் கட்டுக்கோப்பு குலையாமலே இருந்தது. அந்த உப்புக்கடலும், சோளகக்காற்றுக் காலத்தில் வெள்ளை மண்ணை அள்ளிக் கொட்டி அலங்கரிப்பதும், சமூகம் வெவ்வேறு சாதிகளாகப் பிரிந்திருந்த போதிலும், அவர்களுக்குள் நிலவிய உன்னதமான ஒரு உறவும் பாசமும் என்னுள் ஆழமான ஒரு பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன. அங்கு அடிக்கடி நடைபெறும் 'காத்தவராயன் கூத்து' 'பூதத்தம்பி விலாசம்' போன்ற நாட்டுக்கூத்துகளும் எங்கள் குடும்பங்களிலே உள்ள வயது முதிர்ந்தோர் பாடும் தாலாட்டுகள், ஒப்பாரிகளும் துன்னாலையிலிருந்து நாகர்கோவிலுக்கு விறகு கொண்டு வாச்செல்லும் பெண்கள் தலைச்சுமையுடன் வரும்போது பாடும் இனிமையான பாடல்களும் என்னை மிகவும் கவர்ந்திருக்கின்றன. இன்று அந்த வாழ்வு பெருமளவு குலைந்து போய்விட்டாலும் அந்த அனுபவிப்புக்கான ஏக்கம் இன்றும் என் நெஞ்சில் உண்டு. இதன் காரணமாகவே எனது படைப்புகளில் நாட்டாரியலின் தாக்கம் இழையோடி வருகின்றது. மேலும் எமது இனத்தை அடையாளம் காட்டும் கூறுகளில் நாட்டாரியலும் ஒன்று. எனவே இவை மெருகூட்டப் படவும் காலமாற்றத்திற்கேற்ப வளர்த்தெடுக்கப்படவும் வேண்டும். இல்லையேல் இவை மங்கி மறைந்து அழிந்து போய்விடக்கூடிய அபாயம் உண்டு. எனது சக்திக்கேற்ற வகையில் இப்பணியை எனது படைப்புகள் மூலம், குறிப்பாக நாடகங்கள் மூலம் செய்து வருகின்றேன். ☐

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சோ. கிருஷ்ணராஜாவின்

கட்டுரை

# கலையின் உருவாக்கம் இருப்புப் பற்றிய விளக்கங்கள்

## அமைப்பியல் வாதம்

கலை பற்றிய சமகால உரையாடல்களில் மிகவும் செல்வாக்குப் பெறும் கலைக் கொள்கைகளில் அமைப்பியல் வாதமும், கட்டவிழ்ப்புக் கொள்கையும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெறுவன. கலையின் உருவ – உள்ளடக்கம் தொடர்பாக கட்டவிழ்ப்புக்கொள்கையினர் கொண்டுள்ள எதிர்ப்பு மனப்பான்மை கலை இலக்கிய உலகினரின் கவனத்தை ஈர்ப்பதாயுள்ளது. கட்டவிழ்ப்புக்கொள்கையின் ஆதரவாளர்களும் அதனை மறுதலிப்பவர்களும் சூடான வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டுள்ளனர். இவ்விருவகைக் கலைக்கொள்கைகளிலும் அமைப்பியல் வாதமே முதலில் தோன்றியது. அமைப்பியல்வாதிகளால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்கெதிரான விமரிசனம் காலப்போக்கில் கட்டவிழ்ப்பு வாதமாக வளர்த்தெடுக்கப்பட்டது.

அமைப்பியல்வாதிகள் மாக்சிச அழகியலாளரைப்போலவே சமூகவியல், மானிடவியல், மொழியியல் அம்சங்களினடியாகக் கலை அழகியலை அணுகுகின்றனர். இவர்களுடைய அபிப்பிராயப்படி கலைகளில் பிரதிபலிப்பது சமூக வாழ்க்கையாகும்.

மனித உறவுகளைப் பொருளாகக் கொண்ட ஐதீகங்கள், பாடல்கள், நடனங்கள் ஆகிய கலைவடிவங்கள் எல்லாச் சமூகங்களிலும் காணப்படுகிறதொரு தோற்றப்பாடாகும். அதேபோல பல்வேறு கலை – இலக்கிய வடிவங்கள் நாகரீகமடைந்த சமூகங்களில் காணப்படுகின்றன. கலை — இலக்கியங்களின் இயல்பை ஆராய்ந்த உருவவாதிகள் (குறிப்பாக இரஷ்சிய சிந்தனா கூடத்தைச் சேர்ந்தவர்கள்) அவையனைத்திற்கும் பொதுவானதொரு அமைப்பியல் வடிவம் இருப்பதாகக் கருதி அதனை ஐதீகங்கள் பற்றிய ஆய்விலிருந்து தேடிக் கண்டுபிடிக்கமுயன்றனர். உருவவாதிகளின் ஐதீகம் பற்றிய ஆய்வின் முன்னோடியாக விளடிமிர் புறோப் (*Vlidimir Propp*) கருதப்படுகிறார்.

மனித உறவுகள் பற்றிய ஆய்வுகளினடியாக மனித பண்பாட்டு வரலாற்றின் மர்மங்களைத் தெளிவுபடுத்த முயன்ற பிரெஞ்சு மானிடவியலாளர்களும் பழங்குடிகளின் ஐதீகங்களை ஆராய்வதன் மூலம் அதனைக் கண்டுபிடிக்கலாமெனக் கருதி அவ்வழியிற் தம்கவனத்தைச் செலுத்தினர். ஐதீகங்கள் பற்றிய இவர்களது ஆய்வுகள் அமைப்பியல் வாதக் கோட்பாடாகப் பரிணமித்தது. அமைப்பியல்வாதச்சிந்தனையில் முன்னோடியாக லெவி ஸ்ரோசஸ் (*Levi Strauss*) கருதப்படுகிறார்.

ஐதீகங்கள் பற்றிய ஆய்விலிருந்து லெவி ஸ்ரோசஸ் கண்டறிந்த மானிடவியலறிவும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புறோப் கண்டறிந்த கலை—இலக்கிய அடிப் படைகள் பற்றிய அறிவும் கிறிமாஸ் *(Gremas)* தோடொறோவ் *(Todorov)* ஜெராட் ஜெனற் *(Gerard Genette)* போன்றவர்களால் அமைப்பியல்வாத கலை-இலக்கியக் கோட்பாடாக விருத்தி செய்யப்பட்டது.

மனிதமனத்தை நனவுநிலைமனம், நனவிலி நிலைமனம் எனப்பாகுபடுத்திய சிக்மன்ட் ஃபிராய்ட் நனவுநிலை மனம் பற்றிய ஆய்வுகளிலிருந்து நனவிலிநிலை மனத்தின் இயல்பைக் கண்டறியலாமென்றதொரு உளவியற் கொள்கையை ஸ்தாபித்தார். எவ்வாறு நனவுநிலை மனம் பற்றிய தரவுகளிலிருந்து நனவிலிநிலை மனத்தின் இயல்பை ஃபிராய்ட் கண்டறிய முயன்றாரோ அவ்வாறு பழங்குடிகளின் ஐதீகங்கள் பற்றிய பகுப்பாய்விலிருந்து பண்பாட்டுக்கூறுகளிலொன்றான உறவுமுறை *(Kindship)* பற்றிய உண்மைகளைக் கண்டறிய ஸ்ரோசஸ் முயன்றார். இதற்காக மொழியியலாளர்களான சசூர் *(Saussure)*, யாக்கோப்சன் *(Jakobson)* ஆகிய இருவராலும் பயன்படுத்தப்பட்ட முறையியலொன்று ஸ்ரோசசினால் பயன்படுத்தப்பட்டது. எல்லாச் சொற்களிற்கும் ஓர் ஒலிப்படிமமும் *(Sound Image)* அதற்குரியதொரு கருத்தும் *(Concept)* இருப்பதாக சசூர் குறிப்பிட்டார். ஒலிப்படிமம் குறிப்பான் எனவும் கருத்து அதன் குறிப்பீடு எனவும் அழைக்கப்பட்டது. ஐதீகங்களைக் குறிப்பான் என ஏற்றுக்கொண்டு அவற்றிற்குரிய குறிப்பீட்டைத் தேடும் முயற்சி ஸ்ரோசசினால் மேற்கொள்ளப்பட்டது.

லெவி ஸ்ரோசசினால் ஆராயப்பட்ட ஐதீகங்களில் தன்சகோதரி மீது காதல் கொண்ட ஒருவனைப் பற்றிய கதையும் ஒன்று. ஒருவன் தன் சகோதரிமீது காதல் கொண்டான். ஆனால் அச்சகோதரியோ தன் தமையனிடமிருந்து தப்புதற்காக முகில்களிடம் சரணடைந்து சந்திரனாக மாறினாள். சகோதரியைத் தேடிப்பிடிப்பதற்காக அவன் சூரியனாக மாறினான். தினமும் சூரியன் சந்திரனைக் கலைத்துக் கொண்டிருக்கிறது. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் பொழுது இவ்வைதீகம் சூரிய-சந்திரர்களது தோற்றத்தை விளக்குவது போலக் காணப்படுகிறது. ஆனால் இதற்கொரு உள்ளார்ந்த அர்த்தம் இருப்பதாக ஸ்ரோசஸ் வாதிட்டார். மனித உறவு முறையில் சகோதரர்களிற்கிடையே ''தகாபுணர்ச்சி'' விலக்குண்டு என்ற குறிப்பீட்டையே சூரியனாகவும் சந்திரனாகவும் மாறிய சகோதர-சகோதரிக் கதை சுட்டுகிறதென்ற முடிவிற்கு ஸ்ரோசஸ் வந்தார்.

வெவ்வேறு பண்பாடுகளில் வழக்கிலிருக்கும் ஐதீகங்களைப் பற்றி ஆராய்ந்த ஸ்ரோசஸ் அவற்றிடையே சாயலொற்றுமை காணப்படுவதையும், அவையனைத்தும் ஒரேவிதமான அமைப்புடையதாக இருப்பதையும் அவதானித்தார். சசூர் எடுத்துக்காட்டிய மொழியமைப்பு *(Langue)* பேச்சுவடிவம் *(Parole)* என்று வகையீடு ஸ்ரோசசின் அவதானிப்பிற்கு உதவியாயமைந்தது. மொழியமைப்பென்பது மாறா இயல்புடையதொன்று. ஆனால் பேச்சு வடிவமோ ஆளுக்காள் மாறுபடும். எவ்வாறு மொழியின் பேச்சு வடிவம் மாறுபட்டாலும் மொழியமைப்பு மாறாத ஒன்றாக இருக்கிறதோ அதுபோல ஐதீகங்கள் பண்பாட்டிற்குப்பண்பாடு வேறுபட்டாலும் அவையனைத்திற்கும் பொதுவானதொரு ''அமைப்பு'' உண்டென்று ஸ்ரோசஸ் எடுத்துக்காட்டினார்.

மொழியியலாளரான யகோப்சன் மொழியிலுள்ள உயிரெழுத்து மெய்யெழுத்து என்ற வகையீடு மனிதரின் எதிர்நிலையான ஈரிணைச் சிந்தனையின் பெறுபேறு என எடுத்துக் காட்டினார். மனிதனின் அடிப்படைச் சிந்தனை முறையில் எதிர்நிலையான ஈரிணை அமைப்பு காணப்படுகிறது. உதாரணமாக பகல்—இரவு, கறுப்பு-வெள்ளை, பிறப்பு-இறப்பு, நன்மை - தீமை, சரி-பிழை முதலான கூறுகள் இணையாகவே தோன்றுகின்றன. இவ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விருமைத்தன்மை மனித நடத்தை அனைத்திலும் காணப்படுவதாகும். ஐதீகங்களிலும் இவ்வாறு எதிர்நிலைகளான ஈரிணை அமைப்பு காணப்படுகிறதென ஸ்ரோசஸ் ஏற்றுக் கொண்டார்.

இரஷ்சிய உருவவாத சிந்தனா கூடத்தின் முன்னோடியான விளடிமிர் புறோப் வனதேவதைகள் பற்றிய ஐதீகங்களை ஆராய்ந்த பொழுது அவையனைத்தும் ஒரு பொது வடிவத்தினுள் பொருத்தி வருவதை அவதானித்தார். வாக்கியங்களிற்குரிய எழுவாய் பயனிலை அமைப்புபோல ஐதிகங்களிற்குரிய பொது அமைப்பில் 31 கூறுகள் காணப்படுவதாக புறோப் எடுத்காட்டினார். எழுவாய்–பயனிலை வாக்கிய அமைப்பிலிருந்து எவ்வாறு புதுப்புது வாக்கியங்களை உருவாக்கலாமென்பதை பின் வரும் உதாரணத்தால் விளக்கலாம். ''அரசிளங்குமாரன் (எழுவாய்) ஒரு மிருகத்தை ஈட்டியால் குத்திக் கொன்றான்.'' (பயனிலை). இவ்வாக்கியத்தில் வருகிற அரசிளங்குமாரனுக்கு விக்கிரமாதித்தன் என்ற பெயரையும், ஈட்டி என்பதற்குப் பதிலாக வாள் என்பதையும், மிருகம் என வருமிடத்தில் வேதாளம் என்ற சொல்லையும் பயன்படுத்தினால் வாக்கியத்தின் அமைப்பை மாற்றாமலே முற்றிலும் புதியதொரு வாக்கியத்தைப் பெறலாம். இவ்வாறு ஐதீகங்களிற்குரிய பொதுவடிவத்தில் 31 பொதுக் கூறுகள் இருப்பதாக புறோப் எடுத்துக்காட்டினார். இவரது அட்டவணையில் இறுதியாக வரும் ஏழு கூறுகளும் முக்கியமானவை.

25. அருஞ்செயல் ஒன்றைச் செய்யுமாறு கதாநாயகனுக்கு சவால் விடப்படும்.

26. அவனால் அச்செயல் சாதிக்கப்படும்.

27. அவன் போற்றப்படுவான்.

28. போலிக்கதாநாயகன் / வில்லன் அம்பலப்படுத்தப்படுவான்.

29. அவனுக்கு புதிய தோற்றம் தரப்படும்'

30. வில்லன் தண்டிக்கப்படுவான்.

31. கதாநாயகன் ஆட்சியதிகாரத்தை பெற்று திருமணம் புரிவான்.

வனதேவதைகள் பற்றிய ஆய்விலிருந்து பெறப்பட்ட இவ்வட்டவணை காப்பியங்கள் அனைத்துக்கதைவகைகளிற்குமுரிய பொதுவடிவமாக புறோப்பினால் எடுத்துக் காட்டப்பட்டாலும் சற்று சிக்கலான கதையமைப்புகளிற்கு இதனைப் பயன்படுத்துவதிலுள்ள பிரச்சனையை உணர்ந்தார். இதனால் 31 கூறுகளுடன் ஏழுவிதமான பாத்திரங்கள் வாயிலாகச் செயற்படுவதாகக் குறிப்பிட்டார். அவை முறையே

1. வில்லன் 2. புரவலன் 3. உதவியாளன் 4. அரசியும் அவள்தகப்பனும் 5. முடித்துவைப்பவர் 6. கதாநாயகன் 7. போலிக் கதாநாயகன்

ஈடிபஸ் ஐதீகத்தைப் பயன்படுத்தி தனது அனைத்து கதைவகைகளிற்குமுரிய பொதுவடிவத்தை புறோப் பின்வருமாறு விளக்குகிறார். ஸ்பிங்ஸ் என்ற வினோத மிருகம் விடுத்த புதிரை ஈடிபஸ் ஏற்கிறான் (25). ஈடிபஸ்சினால் அப்புதிர் விடுக்கப்படுகிறது (26). இதனால் ஈடிபஸ் கதாநாயகன் அந்தஸ்தடைந்து போற்றப்படுகிறான்(27). பின்னர் மணம்புரிந்து ஆட்சியிலமருகிறான்[31]. ஈடிபஸ் தந்தையைக் கொன்று தாயை மணம் புரிந்ததால் போலிக் கதாநாயகனாகவும் வில்லனாகவும் அம்பலப்படுத்தப்படுகிறான்[28]. ஈடிபஸ் உண்மையறிந்து தன்னைத் தானே தண்டித்துக் கொள்கிறான்[30].

ஈடிபஸ் கதையில் ஒருவரே பலபாத்திரங்களை ஏற்கவேண்டியிருக்கிறது. அரசியும் அவள் தந்தையும் என்பதற்குப் பதிலாக அரசியும் அவள் கணவனும் (தாயும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தந்தையும்) இடம் பெறுகின்றனர், ஈடிபஸ் கதாநாயகனாகவும், நாட்டை காப்பாற்றிய புரவலனாகவும், போலிக்கதாநாயகனாகவும், வில்லனாகவும் ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களில் இயங்குகிறான்.

புறோப்பினது கொள்கை கிறிமாஸ் (1966) என்பவரால் திருத்தியமைக்கப்பட்டது. இவர் மூன்று எதிர்நிலைகளான ஈரிணைகளினடிப்படையில் எல்லாக் கதைகளுக்குமுரிய பொதுவாய்ப்பாட்டை அமைத்தார். புறோப்பினால் எடுத்துக் காட்டப்பட்ட ஏழுவகை பாத்திரச் செயற்பாடுகளும் இதிலுள்ளடங்குகிறது.

1. விடயி–விடயம் (Subjdect–Object)

2. வழங்குநர்–பெறுநர் (Sender-Receiver)

3. உதவியாளர்–எதிராளி (Helper–Opponent)

ஈடிபசின் கதையை கிறிமாசின் வாய்ப்பாட்டின்படி பின்வருமாறு விளக்கலாம்.

1. ஈடிபஸ் லொயோசைக் கொலை செய்தவனைத் தேடுகிறான். இங்கு அவனே விடயியும் விடயமுமாகிறான்.

2. அப்பலோ தெய்வம் ஈடிபசின் தீவினை பற்றி முன்மொழிகிறது. ஈடிபசின் அரசவைக்கு வந்த குருடான சித்தன், ஜொக்காஸ்த், தூதுவன், இடையன் ஆகியோர் தெரிந்தோ தெரியாமலோ உண்மையை உறுதி செய்கின்றனர். செய்தியை ஈடிபஸ் தவறாகப் புரிந்துகொண்டதே இக் கதை.

3. தூதுவனும் இடையனும் தம்மையறியாமலே கொலையாளி யாரென அறிய ஈடிபஸ்சுக்கு உதவி செய்கின்றனர். குருடனும் ஜொக்காஸ்தும் ஈடிபஸ்சுக்கு உண்மையை மறைக்கப் பார்க்கின்றனர். ஈடிபஸ் சரியான விளக்கத்தைப் பெறுவதற்குத் தானே தடையாக இருக்கிறான்.

கிறிமாசைத் தொடர்ந்து கதைகூறலின் அமைப்பு பற்றிய ஆய்வுகளில் தோடறோவின் முயற்சிகள் குறிப்பிடத்தக்கன. செய்வோன் அல்லது செயல் என்ற அடிப்படையில் சொல்லப்படும் கதைகளைப் பிரித்துப் பார்ப்பதன் மூலம் அவற்றின் அமைப்பியற் தொடர்புகளை அறிந்து கொள்ளலாமென இவர் எடுத்துக் காட்டுகிறார். ஈடிபஸ் பற்றிய ஐதீகம் தோடறோவ்வின் முறைப்படி பின்வருமாறு அமைக்கப்படும்.

1. X ஒரு அரசன்

2. Y என்பவள் X இன் தாய்

3. Z என்பவர் X இன் தந்தை

4. X Y யைத் திருமணம் செய்கிறான்

5. X Z யைக் கொலை செய்கிறான்

இவ்வட்டவணையில் **X, Y, Z**என்பன முறையே ஈடிபஸ், ஜொக்கஸ்த், லொயோஸ் ஆகிய மூவரையும் சுட்டுகிறது. முதல் மூன்று வாக்கியங்களிலும் கதையின் மூன்று பாத்திரங்களும் (செயற்படுவோர்) வருகின்றனர். முதலாவதும் இறுதி இரு வாக்கியங்களும் மூன்று பயனிலைகளை [செயல்களை] அரசனாயிருத்தல், திருமணம் செய்தல், கொல்லுதல் உள்ளடக்கியிருக்கிறது பயனிலைகள் பெயரடையாகவும் (உதாரணமாக அரசனாதல்) வினைச்சொல்லாகவும் (மணத்தல், கொல்லுதல்) செயற்படும். இவ்வாறு கதைவடிவங்களை செயற்படுவோர் செயல் என்ற அடிப்படையில் சிறிய சிறிய வாக்கியங்களாக அட்டவணைப்படுத்தியதன் பின்னர் இவையனைத்தையும் ஒரு தொடர் நிகழ்ச்சியாக இணைக்கலாம். ஒன்றன்பின் ஒன்றாக வரும் நிகழ்ச்சித் தொடர் முழுமையான "கலைப்பிரதியாக" மாறுகிறது.

கதையை அமைக்கும் பொழுது அதனைக் கீழ்க்கண்ட ஒழுங்கில் அமைக்க வேண்டுமெனவும் எடுத்துக்காட்டப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமைதி 1 ..... .............. (உதாரணம்) சமாதானம்

வலு ..................... எதிரி கைப்பற்றுதல்

அமைதி கெடல் ......... யுத்தம்

வலு ....... ...... எதிரி தோற்கடிக்கப்படல்

அமைதி 2 .......... மீண்டும் சமாதானம்

இவ்வொழுங்கில் வாக்கியங்களை இணைத்து வெவ்வேறு சம்பவத்தொடர்பு களைக் கொண்ட கதைகளை அமைத்துக் கொள்ளலாமென தோடறோவ் விளக்கு கிறார்.

கலை — இலக்கியம் தொடர்பான அமைப்பியல் வாதச்சிந்தனையின் அடுத்த கட்ட வளர்ச்சி ஜெராட் ஜெனற்றின் ஆய்வுகளிலிருந்து தொடங்குகிறது. கதை வேறு அதன் ஆக்கப்பின்னல் வேறு என்ற இரஷ்சிய உருவவியல்வாதிகளின் பாகு பாட்டை அடியொற்றி ஜெனற் தனது கொள்கையை விருத்தி செய்தார். இதன் படி கதை (Story) கருத்தாடல் [Dis Course] எடுத்துரைப்பு [Narration] என்ற மூன்று தளங்களை எல்லா இலக்கியங்களும் கொண்டிருக்குமென குறிப்பிடுகிறார்.

அனைத்துக் கலைகளிற்கும் கலைச் சூத்திரங்கள் உளதாக வாதிடுவது தவறா னதென அமைப்பியல்வாதத்திற்கெதிரான விமர்சகர்கள்கருதுகின்றனர். கலைப்படைப் புக்கள் ஒவ்வொன்றும் தத்தமக்கேயுரிய தனிச்சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளன. அமைப்பியல்வாதிகள் இத்தனிச்சிறப் பியல்புகளை கவனத்திற்கெடுத்துக் கொள் ளத் தவறிவிட்டனரென இவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

## கட்டவிழ்ப்புக் கொள்கை

கலைகளைப் புரிந்துகொள்ளவும், அழ கியலனுபவத்தை பெறுவதற்கும் அக்கலை யாக்கங்களிற்கு ஏதுவாயிருந்த காரணிகள் பற்றிய அறிவு இன்றியமையாததெனக் கூறும் கலைக்கொள்கைகள் அனைத்தையும் கட்டவிழ்ப்புக் கொள்கையாளர் நிராகரிக் கின்றனர். இவர்களின் அபிப்பிராயப்படி கலையாக்கத்திற்கேதுவான காரணிகளைத் தேடுவது பயனற்றதொரு முயற்சியாகும். மேலும் ஒரு குறிப்பிட்ட படைப்பாக்கத் திற்கு ஏதுவான காரணிகளை அறியமுடி யாதவிடத்து அப்படைப்பை புரிந்துகொள் ளவோ அன்றி ரசிக்கவோ முடியாதென் பது தவறான வாதமென்பது இவர்களது அபிப்பிராயமாகும். ஒரு படைப்புத் தோன்றிய சந்தர்ப்ப சூழ்நிலைகளும், ஏது வாயிருந்த காரணிகளும் பற்றிய அறிவு அப்படைப்பைப் புரிந்துகொள்ள அவசிய மானதெனக் கூறப்பட்டாலும், இத்தகைய புரிந்துகொள்ளலை ஒருவராலும் ஒருபொழு தும் பெறமுடியாதென கட்டவிழ்ப்புக் கொள்கையினர் வாதிடுகின்றனர். சம காலத்தில் வாழ்கிற படைப்பாளியினால் உருவாக்கப்பட்டதென்றாலும் கூட, படைப்பாளியும் நாமும் வேறுவேறு நபர் கள் என்பதனால்; அவன் தன் படைப்பை புரிந்துகொண்டதெவ்வாறோ அவ்வாறு எம்மால் புரிந்துகொள்ள முடிவதில்லை. ஒரு படைப்பு வெவ்வேறு நபர்களால் வெவ்வேறு வகையாகப் புரிந்து கொள்ளப் படுகிறதென்பதனால் புரிந்துகொள்ளல் பல வகைப்படுமென்பதும் பெறப்படும்.

கலையைப் புரிந்துகொள்ளல் தொடர் பாக கட்டவிழ்ப்புக் கொள்கையினர் எடுத் துக் காட்டும் பிரச்சனையை பின்வருமாறு விளக்கலாம். ''பேராசிரியரை ஆறுமணிக் குச் சந்திக்கலாம்'' இக்கூற்றின் தாற்பரி யத்தை புரிந்துகொள்ள இவ்வாக்கியத்தில் விடப்பட்டுள்ள சொற்களை ஒருவர் அனு மானித்துக்கொள்ள வேண்டும். எந்தப் பேராசிரியர்?, எங்கு சந்திக்கலாம்?, காலை ஆறு மணிக்கா அல்லது மாலை ஆறுமணிக்கா சந்திக்கலாம்? என்கிற வினாக்களிற்கான விடையை அனுமானிக்க வேண்டும். மேற்படி வாக்கியத்தைக் கூறு பவனும் கேட்பவனும் பரஸ்பரம் ஒருவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கருத்தை மற்றவர் அறியும் வல்லமையும பரிச்சயமும் இல்லாவிடின் மேற்படி வாக்கியத்தைக் கேட்பவன் புரிந்துகொள்ள முடியாது. மேலும் ஒருவரை ஒருவர் நன்றாக புரிந்து கொண்டவர்களாயிருக்கும் கணவன் மனைவியர் மத்தியிலும், நண்பர்கள் மத்தியிலும் ஒருவர் கூறுவதை மற்றவர் தப்பாக கற்பித்துக்கொண்டு தம்மிடையே முரண்படுவதை பலசந்தர்ப்பங்களில் நாம் கண்டிருக்கலாம். சில சந்தர்ப்பங்களில் நாமே அத்தகைய அவலத்துள் அகப்பட்டிருத்தல் கூடும். நாளாந்த உரையாடலேயே இவ்வளவு சிக்கல் எழுகின்றதென்றால் காலத்தாலும் இடத்தாலும் அன்னியப்பட்ட கலை-இலக்கியப் படைப்புகளைப் புரிந்துகொள்ளுதல் எத்துணை சிரமமானதென்பது உணர்ந்து கொள்ளக்கூடியதே.

வரலாற்றின் ஒவ்வோர் காலகட்டத்திலும் கலை பற்றி வெவ்வேறு விதமான விளக்கங்களே கொடுக்கப்பட்டு வந்துள்ளன. இதனால் கலை பற்றிய உண்மையான விளக்கமென ஒரு விளக்கமில்லையென்பதும், ''உண்மையான விளக்கம்'' என்ற கருத்தாக்கமே அர்த்தமற்றதொரு வெற்று சொல்லென்பதும் பெறப்படும்.

கட்டவிழ்ப்புக் கொள்கையினரின் அபிப்பிராயப்படி கலைப்படைப்பின் அர்த்தம் ஒருவராலும் ஒருபொழுதும் முழுமையாக அறியப்படுவதில்லை. ஒரு கலைப் படைப்பில் இடம்பெறுகிறகுறிகள் சந்தர்ப்பத்திற்கு சந்தர்ப்பம் வெவ்வேறு அர்த்தங்களைப் பெறும்.

கட்டவிழ்ப்புக்கொள்கையை கலை பற்றியதொரு விளக்கமாகவே நாம் கருதல் வேண்டும். கலைஞனது நோக்கத்தை சுவைஞர்கள் ஒருபொழுதும் மீளமைக்கவோ அல்லது குறிப்பிட்ட காலத்திலும் இடத்திலும் பயன்படுத்தப்பட்ட குறியீடுகளாகக் கலையைக் கருதுவதோ அல்லது பெரும்பாலான மக்கள் கருத்தெதுவோ அதுவே குறிப்பிட்டதொரு கலைப்படைப்பின் விளக்கமாகுமெனவோ கூறமுடியாதென கட்டவிழ்ப்புக் கொள்கையினர் வாதிட்ட பொழுதும், எந்தச் சமூகக் கட்டமைவில் ஒரு கலைப்படைப்பு தோன்றியதோ அந்த சமூகக்கட்டமைவின் கருத்து நிலைகள் பற்றியறிவதற்கு அவை உதவுமெனக் குறிப்பிடுகின்றனர். இக்கருத்தில் கட்டவிழ்ப்புக் கொள்கையினர் மாக்சிச அழகியலுடன் ஒன்றுபடுவது அவதானிக்கத்தக்கது.

ஒரு குறிப்பானின் (*signifier*) அர்த்தம் நாம் அறிந்து கொண்டதிலும் பார்க்க அதிகமாகவே இருக்குமெனக் கட்டவிழ்ப்புக் கொள்கையினர் வாதிடுகின்றனர். சாதாரண கலைப்படைப்புகளும், சாதனைகளாகக் கருதப்படும் கலைப்படைப்புக்களும் ஒரேவித அந்தஸ்துள்ளவையென்பது இவர்களது நிலைப்பாடு.

சந்தர்ப்ப சூழ்நிலையிலிருந்து பிரித்தெடுத்துக் கலைகளை தனியாக ஆராயமுடியாதெனவும்; ஒருபடைப்பாளி எந்த விதத்திலும் தான் வாழ்ந்த சமூகத்திலிருந்தும், தன்காலத்திய கருத்து நிலையிலிருந்தும் விடுபட்டுச் சுயாதீனமாக இயங்க முடியாதெனவும் கட்டவிழ்ப்புக் கொள்கையினர் வாதிடுகின்றனர். இவர்களது அபிப்பிராயப்படி ஒரு அற்பமான தகவல் கூட கலைப்படைப்பொன்றின் விளக்கத்திற்கு இன்றியமையாததாகலாம்.'சிலசந்தர்ப்பங்களில் ஒரு ஓவியத்திலும் பார்க்க அவ்வோவியம் பொருத்தப்பட்ட சட்டம் பலமுக்கிய தகவல்களைத் தருவதாயிருக்கலாம். மாயாவியின் மலைக்கோட்டை மர்மத்திலிருந்து சிலப்பதிகாரம் வரை, மூன்றாந்தர சினிமாவிலிருந்து சத்தியஜித்ரேயின் பதர் பாஞ்சாலி வரை எதுவும் கனதியாக ஆய்விற்குட்படுத்தப்படலாமென்பது இவர்களது அபிப்பிராயமாகும்.

மார்க்சிஸ்டுக்கள் போலவே கட்டவிழ்ப்புக் கொள்கையினரும் தம்மையோர் புலமைத்துவ இயக்கமாகவும், அரசியலில் ஆர்வமுடையவர்களாகவும் கருதிக் கொள்கின்றனர். யாக்ஸ் டெறிடா (*Jacques-Derrida*) என்பவரே கட்டவிழ்ப்புக் கொள்கையின் ஸ்தாபகரும் முக்கிய பிரமுகருமாவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவிதை

மீசாலையூர் கமலா

எழுதிய

# தந்த பின் களிப்படையலாம்

நல்லெண்ணத்தோடு,
பல தடைகள் நீக்கம்!
யுத்தம் நிறுத்துவதென்றால்,
யோசனையவர்க்கு.
சமாதானமென்று
சொல்லிக் கொண்டே
எங்கள் மீனவரது
உயிர்கள் உறிஞ்சல்!
எத்தனை வடிவத்தில்
இப்படி உறிஞ்சுகின்றனர்.
காலங் காலமாக
ஏமாந்ததாற்றானே
எழுந்த எங்கள் செல்வங்கள்
விழுந்து வெற்றிக்
குவியல்களைக்
குவித்து நிற்கின்றனர்.
நிற்பதால்......
தேசங்களெல்லாம்
திரும்பிப் பார்த்து
வியந்து நிற்க - நீவிரும்,
"தமிழர்" என்று
தற்பெருமையோடு!

இப்போ துமக்குத்
தடுமாற்றமா?
பசப்பும் வார்த்தைகளால்
பெரு மகிழ்வா?
சமாதானம் பேசுபவர்
சரியாகத் தந்தபின்
களிப்படையலாம்...
உடனடியாக உங்கள்
உள்ளக் கொப்பியை
ஒருக்காற் புரட்டுங்கள்.



ஆண்டாண்டாகப்
பெற்ற உதைகள்...
கத்திக் கிரையானவர்
கற்பிழந்த பெண்களோடு
மண்ணோடு சேர்ந்து
தண்ணீரில் கரைபவரை
மனக் கண்ணில்
நிறுத்திடுங்கள்.

தந்த பின்......,
களிப்படையலாம்.
அதுவரையில்

www.tamilarangam.net



# உடையாத விலங்குகள்

ADELE ANN அடேல் ஆன்

உடையாத விலங்குகள் (*UNBROKEN CHAINS*) என்ற தலைப்பில் யாழ்ப்பாண சமூகத்தில் நிலவும் சீதன முறைமை பற்றி அடேல் ஆன் எழுதிய ஆங்கில நூல் சமீபத்தில் வெளியாகியிருக்கிறது. இந்த நூலின் தமிழாக்கம் தொடர் கட்டுரைகளாக வெளிச்சத்தில் பிரசுரமாகின்றது. நூலின் முதற் பாகத்தின் முதற்பகுதியை இவ்விதழ் தாங்கி வருகிறது.

## முதலாம் பாகம்

### தேசவழமையும் தாய்வழிச் சொத்தும்

யாழ்ப்பாண சமூகக் கட்டமைப்பில் நிலவும் சீதனமுறைமையானது தனித்துவமானது; தனக்கே உரித்தான தனிப் பண்புகளைக் கொண்டது. பெண்களுக்கு சொத்துடமையைப் பராதீனப் படுத்தும் வழிமுறையோடு இது தொடர்புடையது.

பலநூறு ஆண்டு காலமாக, யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பிரத்தியேகமான சொத்துடமை உறவுகள் நிலவிவந்திருக்கிறது. இந்த உறவுகளில், சீதன வழக்கு, மையமான ஒரு பங்கை வகித்துள்ளது. திருமணத்தின்போது பெண்களுக்கு தாய்வழிச் சொத்தை பகிர்ந்தளிப்பதுபற்றி தேசவழமைச் சட்டம் எடுத்துக்கூறுகிறது. இந்தத் தேசவழமைச் சட்டத்தின் கட்டமைப்பில் செயற்படும் ஒரு சொத்துடமைக் கருத்துருவமாக (*Property Concept*) சீதனத்தைக் கொள்ளலாம்.

தாய்வழிச் சொத்துடமை என்பது புதுமையான விடயமல்ல. எனினும் யாழ்ப்பாண சமூகத்தில், ஒரு முக்கிய சமூகப் பண்பாட்டு நடப்பியலாக விளங்கும் திருமணம் வாயிலாக, தாய்வழிச் சொத்தை பராதீனப்படுத்தும் முறையானது தனி இயல்பான பண்பைக்கொண்டது எனலாம். இந்தச் சொத்து பரிமாற்ற முறைமையை ஆழமாகப் பார்ப்பதாயின், தேசவழமைச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சட்டத்தில் அது எவ்வாறு வேர் பதித்து நிற்கிறது என்பது பற்றி நாம் ஆராய வேண்டும்.

## சம்பிரதாயத்திலிருந்து சட்டம்வரை

இலங்கைத் தீவின் வடகிழக்கு மாணிலங்களில் வாழும் தமிழ் மக்கள், பல நூற்றாண்டு காலமாக, தங்களது சொந்த மரபுகள், வழக்கங்கள், நியமங்கள் வாயிலாகவே ஆளப்பட்டுவந்தனர். வடக்கில், குறிப்பாக யாழ்ப்பாண சமூக கட்டமைப்பை பொறுத்தவரை, இந்த சமூக நடைமுறை வழக்கங்கள் தேசவழமை என அழைக்கப்பட்டுவருகிறது. 'ஒரு தேசத்தின் வழமைகள்' என இது பொருள்படும்.

சமூக நடைமுறை வழக்கங்களின் தொகுப்பாக விளங்கும் தேசவழமையானது, நீண்டகாலமாகவே யாழ்ப்பாண மக்களின் சமூக வாழ்வை நிர்ணயிக்கும் சக்தியாக இயங்கிவந்திருக்கிறது. ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியின்போது இந்த சமூக வழக்கங்கள், செம்மையான வடிவமைப்பில் எழுதப்பட்ட சட்டக்கோவையாகத் தொகுக்கப்பட்டன. பதினேழாம் நூற்றாண்டில், போர்த்துக்கீய காலனித்துவத்தை தொடர்ந்து ஆட்சி ஏறிய ஒல்லாந்தர்கள், இந்தச் சட்டத் தொகுப்பு வேலையை மேற்கொண்டனர். தமது காலனித்துவ நிர்வாக அமைப்பின்கீழ் மக்களை ஆளும் ஊடகமாக எழுதப்பட்ட சட்டங்களாக எதுவும் இல்லாததால், மக்களின் மரபுவழிவந்த வழக்கங்களை சட்டமாகத் தொகுக்க முடிவுசெய்தனர். அந்நிய சட்டங்களை சுதேசியமக்கள்மீது அவர்கள் திணிக்க முனையவில்லை. அது, தமது ஆட்சியின் கீழுள்ள குடியேற்றவாசிகள் மத்தியில் எதிர்ப்பையும் கிளர்ச்சியையும் தோற்றுவிக்கலாமென அவர்கள் அஞ்சினர். இது சம்பந்தமாக, அன்று யாழ்ப்பாணத்தின் டச்சுத் தளபதியாகவிருந்த ஹென்றி சுவாடிகுரோன் தனது நினைவுக் குறிப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

"நீதிமன்றுகளில் சட்டப் புத்தகங்கள் இல்லாததையும் என்னால் காணமுடிந்தது பல்வேறு சுதேசிய வழக்கங்கள் இருந்தன. அவற்றின் அடிப்படையிலேயே சமூகப் பிரச்சனைகள் தீர்த்துவைக்கவேண்டியிருந்தது. ஐரோப்பியச் சட்டங்கள் பிரயோகிக்கப்பட்டால், தமக்கு அநீதி வழங்கப்பட்டதாக உள்ளூர்வாசிகள் கருதக்கூடும். அது நாட்டில் கலவரங்கள் ஏற்படுவதற்கான காரணியாகவும் அமையலாம்.

மிகவும் கவனமான ஆய்வும் அனுபவமும் இல்லாமல் இவ்விடயங்கள் பற்றிய அறிவைப் பெறமுடியாது. எல்லோருமே இந்த அறிவைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கமாட்டார்கள். எனவே, உள்ளூர் தலைமையதிகாரிகள், நடுநிலைமை வகிக்கும் அடிமைகளிடமிருந்து பெறப்படும் தகவல்களைக்கொண்டு சுருக்கமான சட்டத் தொகுப்பு ஒன்றை உருவாக்குவதே நன்மைபயக்கும்..." (1)

தளபதி சுவாடிகுரோனின் ஆலோசனைக்கு இணங்க யாழ்ப்பாண மக்களின் வழக்கங்களை ஆய்வுசெய்து, ஆவணப்படுத்தி, தொகுக்கும் வேலைகளை ஒல்லாந்து அரசாங்கம் தொடக்கிவைத்தது. யாழ்ப்பாணத்திற்கு திசாவையாகவிருந்த கிளாஸ் ஐசாக் 1707ம் ஆண்டு, ஜனவரியில் இந்தக் கைங்கரியத்தை செய்து முடித்தார். தொகுப்பு வேலைகள் முடிவடைந்ததும் அது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. பின்னர் அத் தொகுப்பை கிளாஸ் ஐசாக் பன்னிரெண்டு தமிழ் முதலியாளர்களிடம் கையளித்தார். இத் தொகுப்பு, மக்களின் உண்மையான வழக்கங்கள் என்பதை முதலியார்கள் உறுதிப்படுத்தினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதனையடுத்து, இத் தொகுப்பு சட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

*1799*ல், ஒல்லாந்தருக்கு அடுத்ததாக, ஆங்கிலேயர் காலனித்துவ ஆட்சிபீடம் ஏறினர். ஆங்கிலேயரும் தேசவழமை விதிக்கோவையை யாழ்ப்பாண மானிலத்து சட்டங்களாக ஏற்றுக்கொள்ள தீர்மானித்தனர். *1806*ம் ஆண்டு, தேசவழமை சட்டத்தை அங்கீகரித்து பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர் ஒரு பிரகடனத்தை விடுத்தனர். அந்தப் பிரகடனத்தில்,

*"ஒல்லாந்து தேசாதிபதி சிமன்ஸின் ஆணைப்படி தொகுக்கப்பட்ட தேசவழமை அல்லது யாழ்ப்பாண மாகாணத்து மலாபார் மக்களின் வழக்கங்கள், முழுமையான சட்ட அதிகாரம் கொண்டவையாகக் கருதப்படவேண்டும். இந்த வழமைகளின் அடிப்படையிலேயே இம் மக்கள் மத்தியிலான பிணக்குகள் தீர்க்கப்பட வேண்டும்" (2)*

எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தேசவழமைச் சட்டமானது, காலனித்துவ ஆட்சி காலத்திலிருந்து பல்வேறு மாற்றங்களுக்கு இலக்காகியது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். பல்வேறு சட்டப் பாரம்பரியங்களின் ஆதிக்கங்களுக்கு ஆளாகி, தேசவழமைச் சட்டத்தில் பல தழுவல்களும், மாற்றங்களும் நிகழ்ந்தன. ரோம–டச்சுச்சட்டம், பிரித்தானியசட்டம், இந்துச்சட்டம் ஆகியன இந்த மாற்றங்களுக்கு பங்களித்தன எனலாம்(3)உதாரணமாக, திருமண உரிமைகள், வாரிசுகளுக்கான கட்டளைச் சட்டம் தேசவழமையின் மூலத்திலிருந்து மாற்றியமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## சொத்து உறவுகளும் திருமணமும்

தேசவழமைச் சட்டத்தை ஒரு சிறந்த ஆதாரபூர்வமான சமூக–வரலாற்று குறிப்பேடாகக் கொள்ளலாம். இந்த வரலாற்று ஆவணம், அக்கால யாழ்ப்பாணத்தின் சமூகக் கட்டமைப்புபற்றி, குறிப்பாக சாதியம்பற்றியும் அதன் தளத்தில் எழுந்துநிற்கும் உற்பத்தி உறவுகள் பற்றியும் மிகவும் தெளிவாகப் புலப்படுத்திக் காட்டுகிறது. இந்த வழக்காற்றுச் சட்டங்களை ஆழமாக உள்நோக்கிப் பார்க்கும்பொழுது, யாழ்ப்பாண சமூகக் கட்டமைப்பானது நிலப்பிரபுத்துவ அம்சங்களாலும் சாதிய உறவுகளாலும் பின்னிப்பிணைக்கப்பட்ட ஒரு சிக்கலான பொருண்மியக் கட்டுமாணத்தில் அமையப்பெற்றிருந்தது என்பது புலனாகும்.

சாதிய முறைமையானது, அதிகாரப் படிநிலை அடுக்குகளைக்கொண்டதாக அமையப்பெற்றிருந்தது. மிகவும் கண்டிப்பான, இறுக்கமான முறையில் சாதிய உறவுகள் பேணப்பட்டன. யாழ்ப்பாண சமூகத்தில் நாற்பது வெவ்வேறான சாதிகள் இருந்ததாக தேசவழமை ஆவணப்படுத்திக் கூறுகிறது. இந்த சாதிகளுக்கு வகுக்கப்பட்டிருந்த வெவ்வேறு சமூகப் பொறுப்புகள், பங்குகள், கடப்பாடுகள் பற்றியும் தேசவழமையில் விபரித்துச் சொல்லப்படுகிறது. சமூக அதிகார ஏணியின் உச்சத்திலிருந்த வேளாள சமூகத்தினர், பெரும்பாலான சொத்துக்கு உரிமையாளராக இருந்தனர். அதிக அளவிலான சமூக அந்தஸ்த்தும், அதிகாரமும் அவர்களிடம் இருந்தது. 'தாழ்த்தப்பட்ட சாதிகள்' எனக் கூறப்பட்ட மக்களில் பெரும்பாலானோர் சொத்துடமை அற்றவர்களாக இருந்தனர். சமூக அதிகார ஏணியின் அடித்தளத்தில், மிகவும் ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட சாதிகளாக இருந்தவர்கள் 'அடிமைகளாக' 'தீண்டாதவர்களாக' கருதப்பட்டனர். நடுத்தர சாதிகள் 'குடிமைகள்'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




என வர்ணிக்கப்பட்டனர். இவர்கள் வேளாள சமூகத்தினருக்கு சமூகப் பொருளாதாரத் தொண்டுகளை ஆற்றினர்.

சொத்துரிமைகளைப் பேணுவதும், சொத்துறவுகளை ஒழுங்கமைப்பதும்தான் தேசவழமைச் சட்டத்தின் சாராம்சமாக, அதன் அடிப்படைச் செயற்பாடாக இருந்தது எனலாம். பண்டைய யாழ்ப்பாண சமுதாயத்தில் திருமண முறைமையானது முக்கியத்துவம்வாய்ந்த சமூக நிறுவனமாக விளங்கியது. சமூக இயக்கத்தின் மையமாகவும் அமைந்தது. இந்த திருமண நிறுவனத்துடன் இணைபிரியாதவாறு சொத்துடமை உறவுகள் பின்னிப்பிணைந்து இருந்தன. தேசவழமையை நன்கு ஆராய்ந்து பார்த்தால் இது புலனாகும். முதிசம், சீதனம், தேடியதேட்டம் என்ற வகையில், சொத்துடமை மூன்று ரகங்களாக பராதீனப்படுத்தும் முறைபற்றி தேசவழமை விளக்குகிறது. இந்த மூன்று ரக சொத்துப் பிரிவுகளுக்கும் தேசவழமையில் கொடுக்கப்படும் வரைவிலக்கணத்திலிருந்து திருமணத்திற்கும் சொத்துறவுகளுக்கும் மத்தியிலான தொடர்பினைப் புரிந்து கொள்ளலாம். தேசவழமை சொல்கிறது:

*''பண்டைக்காலத்திலிருந்தே திருமணம் வாயிலாக கணவன் மனைவியால் கொண்டுவரப்பட்டு ஒன்று சேரும் சகல உடைமைகளும் பிரித்து வகைப்படுத்தப்பட்டன. கணவனால் கொண்டுவரப்படும் ஆதனத்தை முதுசம் அல்லது பரம்பரைச் சொத்து என்ற பிரிவாகவும், மனைவியினால் கொண்டுவரப்படுவதை சீதனம் அல்லது வரதட்சனை என்ற பிரிவாகவும் திருமணம் நிலைத்திருக்கும்பொழுது பெறப்படும் இலாபங்களை தேடியதேட்டம் அல்லது சம்பாதனம் என்ற பிரிவாகவும் வகுத்துக்காட்டப்பட்டுள்ளது.''* (4)

பண்டைய யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டு வாழ்வில், திருமணமும், குடும்ப உருவாக்கமும் ஒரு மையமான இடத்தை வகித்தது. திருமணமானது சந்ததி விருத்தியை மட்டும் பேணவில்லை. சொத்துறவுகளைப் பேணுவதிலும், சொத்துறவுகளை மீளாக்கம் செய்வதிலும் திருமணம் முக்கிய பங்கு வகித்தது.



திருமணங்கள் பெற்றோராலும், உறவினராலும் ஒழுங்குசெய்யப்பட்டன. இந்த ஒழுங்குத் திருமணத்தில், வாழ்க்கைத் துணையை தாமாகத் தேர்ந்தெடுக்கும் தெரிவுரிமை தம்பதிகளுக்கு இருக்கவில்லை. ஒழுங்குத் திருமண முறைமையில் பெற்றோரே பிரதான பாத்திரத்தை வகித்தனர். அவர்களே திருமணத்தை ஒழுங்கு செய்தனர். இளம் தம்பதிகள் பெற்றோருக்கு பணிந்துபோகும் பங்காளிகளாகவே இருந்தனர். அந்தக் காலத்தில், அனேகமாக மிகவும் இளம் வயதிலேயே திருமணங்கள் நிகழ்ந்தன. (5)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருமண ஒழுங்கில், சாதியமும், சொத்துடமையும் முக்கிய அம்சமாக விளங்கின. குறிப்பாக வேளாள சமூகத்தினர் மத்தியில் இந்த நடைமுறை இருந்தது. "நீண்டகாலமாக, வேளாளர்களே பொருள்வளம் கொண்டவர்களாக விளங்கினர். அவர்கள் தமது சாதிய வட்டத்திற்குள்ளேயே திருமணம் செய்து கொண்டனர்" என்கிறார் பால்டேயஸ் (6). சொந்த சாதிக்குள் மட்டுமன்றி, குடும்ப உறவிற்குள்ளும் திருமணங்கள் நிகழ்ந்தன. இதற்கு சமூக அங்கீகாரமும் இருந்தது. தமிழர் குடும்ப உறவு முறைமையில் சகோதரன் சகோதரி பிள்ளைகளான மைத்துனர்கள் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

ஒட்டுமொத்தத்தில் பார்க்குமிடத்து, ஒழுங்குத் திருமணமுறைமையானது சொத்துடமை உறவுகளைப் பேணுவதற்கும் நீடிப்பதற்கும் ஏதுவாக உள்ளது எனலாம். சாதியக் கட்டமைப்பிற்குள் சமூக மேலாதிக்கத்தை பேணுவதற்கும் இது வாய்ப்பாக இருந்தது. எனவே, சொத்துடமையை நிலைப்படுத்தி, நீடிப்பதில் திருமண நடைமுறை முக்கிய பங்கு வகித்தது எனக் கொள்ளலாம். திருமண நிகழ்ச்சியும் முக்கியமானதாக அமைந்தது. திருமண நிகழ்ச்சியின்போதே பெண்களுக்கு சொத்துடமை பராதீனப்படுத்தப்பட்டது. திருமணத்தின்போது பெண்களுக்கு வழங்கப்படும் சொத்துடமையே சீதனம் என அழைக்கப்பட்டது.

திருமண வைபவத்தின்போது மணப்பெண்ணுக்கு வழங்கப்படும் சொத்துடமையை சீதனமென தேசவழமை விளக்குகிறது. தேசவழமையில் இன்னொரு பந்தியை நாம் இங்கு மேற்கோள் காட்ட விரும்புகிறோம். இதில் முதிசத்திற்கும், ஒரு பெண்ணின் சீதனத்திற்கும் மத்தியிலான வேறுபாட்டைக் காட்டுவதுடன் சீதனத்தின் தன்மையையும் தெளிவாக விளக்குகிறது.

*"தந்தை இறந்தவுடன் அவரால் திருமணத்தின்போது கொண்டுவரப்பட்ட உடைமைகள் யாவும் புதல்வனுக்கு அல்லது புதல்வர்களுக்கு பரம்பரைச் சொத்தாக சென்றடையும். புதல்வி அல்லது புதல்விகள் திருமணம் செய்யும்போது அவர்கள் ஒவ்வொருவருக்கும் சீதனம் அல்லது வரதட்சனையாக அவர்களது தாயின் சொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்படும். ஆகவே, வழக்கமாக கணவனின் சொத்து எப்போதும் ஆண் வாரிசுகளிடமும் மனைவியின் சொத்து பெண் வாரிசுகளிடமும் சென்றடையும்" (7)*

*"பெற்றோர்கள் உயிருடன் இருக்கும்வரை, ஆண்பிள்ளைகள், எந்த உடைமைக்கும் உரித்து கோரக் கூடாது" (8)* என்றும் தேசவழமை விதிக்கிறது. திருமணத்தின்போது மணப்பெண்ணுக்கு சொத்துடமை பராதீனப் படுத்தப்படுகிறது. *"உறுதி ஓலையில் எழுதப்பட்டு வழங்கப்படும் சீதனத்துடன் புதல்விகள் திருப்தி காண வேண்டும். அத்துடன் மேற்கொண்டு பெற்றோரின் சொத்துடமையில் பங்குகோரும் உரிமை அவர்களுக்குக் கிடையாது. ஆனால் பெற்றோருக்கு வேறு பிள்ளைகள் இல்லாத பட்சத்தில் முழுச் சொத்துக்கும் அவர்கள் வாரிசு ஆவார்கள்" (9)*

சீதனமாக எழுதப்பட்டதைத் தவிர்ந்து, மேலதிகமாக உடைமைகளுக்கு உரித்துக்கோர பெண்களுக்கு உரிமையில்லை என விதிக்கப்பட்டபோதும் அவர்களுக்கு வாரிசுச் சொத்துரிமை உண்டு. இதன் அடிப்படையில் உறவினர்களிடமிருந்து வாரிசு சொத்துக்களையும் நன்கொடைகளையும் பெண்கள் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தாய்வழிச் சொத்தும் சீதனச்சொத்தும்

மேற்தரப்பட்ட விளக்கங்களிலிருந்து, தலைமுறை தலைமுறையாக, சொத்துடமை பராதீனப்படுத்தும் முறைமைபற்றி பார்த்தோம். தனித்தன்மைவாய்ந்த, வேறுபட்ட இரு வழிகள் ஊடாக மரபு வழிச் சொத்து கையளிக்கப்படுகிறது தாய்வழிச் சொத்தாகவும், தந்தை வழிச் சொத்தாகவும் ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு சொத்துடமையை கையளிக்கும் தனிச் சிறப்பு வாய்ந்த சமூக நடைமுறையாக இதனைக் காணலாம். வேறுபட்ட இவ்விரு சொத்துப் பங்கீட்டு முறைமைகள் எவ்வாறு தோற்றுவாய்கொண்டன என்பது ஆழமான ஆய்வுக்குரிய விடயம். திருமணம் என்ற சமூக நடைமுறையுடன், தாய்வழிச் சொத்தை பராதீனப்படுத்தும் முறை எவ்விதம் தொடர்புகொண்டிருக்கிறது என்பதை விசாரணைசெய்து விளக்குவதே எமது பிரதான நோக்கம். இவ்விடயம் பற்றி இனிப் பார்ப்போம்.

(தொடரும்)

## உசாத்துணை நூல்களும் குறிப்புகளும்


1. H. W. TAMBIAH. *The Laws and Customs of the Tamils of Jaffna (TheTimes of Ceylon) page 27.*

2. H. W. TAMBIAH *'The Law of Tesawalamai' in Tamil Culture, Vol. VII. NO. 4. October 1958. page. 399.*


இங்கு தரப்பட்ட மேற்கோளில் 'மலாபார்' என்ற சொற்பதம் பாவிக்கப்படுகிறது. யாழ்ப்பாணத் தமிழ் மக்களை குறித்துக் காட்டுவதற்காக காலனித்துவ ஆட்சியாளர்களால் பாவிக்கப்பட்ட சொற்பதம் இது. தென்மேற்கு இந்திய கரையோர பிரதேசமான மலாபார் (கேரளம்) மக்களின் வழக்கங்களோடு ஒப்புநோக்கி யாழ்ப்பாண மக்களையும் மலாபார் வாசிகள் என காலனித்துவ ஆட்சியாளர் குறிப்பிட்டனர். இந்த ஒப்புவமைபற்றி தம்பையா தரும் விளக்கத்தினை கீழ்க் கண்ட பந்திகளில் பார்க்கவும். *The Laws and Customs of the Tamils, pages 52-59.*


3. H. W. TAMBIAH *'The Law of Thesawalamai' Tamil Culture. Vol. VII. NO. 4. Thesawalamai has also been developed by case precedent see H. F. Mutukisna. The Thesawalamai( Ceylon Times 1862)*

4. H. W. THAMBIAH *Appendix II, The Thesawalamai Ordinance. The laws and Customs of the Tamils of Jaffna. (Times of Ceylon) page 25.*

5. P. BALDAEUS. *'Chapter Forty Seven', A True and Exact Description of the Great Island of Ceylon. A new and Unabridged translation into English by Pieter Brother (The Ceylon Historiccal Journal) Vol. VIII July 1958 to April 1958 (NOS. 1-4)*

6. P. BALDAEUS. *Ibid. page. 354*

7. H. W. TAMBIAH. *'Appendix II. The Thesawalamai Ordinance.' The Laws and Customs of the Tamils of Jaffna.*

8. *Ibid. page 27.*

9. *Ibid. page 26.*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1993 வைகாசி மாத 'வெளிச்சம்' இதழில் புதுவை இரத்தினதுரையின் **நலம் நலமறிய ஆவல்** என்ற கவிதைக்கு ஐரோப்பிய நாடொன்றில் இருந்து வெளிவரும் '**தமிழோசை**' பத்திரிகையில் கவிஞர் **புதியபாரதி** ஒரு பதில் கவிதை எழுதியிருந்தார். புதியபாரதியின் அதே கவிதையும் புதுவை இரத்தினதுரையின் மேற்படி கவிதையும் கனடாவிலிருந்து வெளிவரும் 1994, செப்டம்பர் மாத **ஈழகேசரியில்** மீண்டும் பிரசுரமாகியுள்ளன. வெளிச்சம் வாசகர்களுக்காக கவிஞர் புதியபாரதியின் கவிதை இங்கே பிரசுரமாகிறது.

# நண்பா!

புதுவை இரத்தினதுரை
நீ போட்ட பதிலுரையில்
உன் முகம் பார்த்தேன்......
என்ன பெருமை உனக்கு
கல்லூரி விடுதி சென்று
கல்வி பயில்வது போல்
உன்மகள் களம் சென்று பயிற்சி கண்டாள்.
விடுமுறைக்கு வருவாள் என்றாய்.
வராமல் அவள் தற்கொடையே ஆனாலும்
அழுவதற்கு நீயில்லை.
அடே புலவா, நீ சொன்னாய்
நிலத்துக்கு குடை பிடிக்கும் பூவரசும்
நிலம் பெயரவில்லை.
அந்த அந்திராணைத் தரவைப் பெருவெளி
பன்றீத் தலைச்சி அம்மன் பாதைத்தெரு
இன்னும் இருக்கிறது என்றாய்.
நீ மட்டும் என்னவாம் .....
நிலத்துள் வேருன்றி நிலம் முழுவும் வியாபித்து
நீயே விழுதுதர நிற்கும் ஆலமரம்
இல்லை அகல(ா)மரம்
உன் பெருமைக்கு உயிர் இருக்கிறது.
நீ நிலத்தை சுமக்கிறாய்
என்னைப் பார்........
மலத்தைச் சுமக்கும் வயிற்றீற்கு
மறுபடியும் உணவு மேசையில் இருக்கிறது.
உன்மகள் கருவைவெறுத்துக்
களம் புகுந்தாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்மகளும் அப்படித்தான்.
ஒன்று போதும் மீதமெல்லாம்
கலைப்பேன் என்கிறாள்.
ஆமடா
பொலிவாய்த்தான் இருக்கிறாள்.
'என்சினியர்' போட்டால்தான் தாலி என்கிறாள்.
ஆனால்பார்;
எலியாய் நிலம் உழுது பொந்தில் உறைந்து
புலியாய் எதிரிக்கு முகம் காட்டும் உன்மகளுக்கு
இந்த உலகம் சரித்திரம் எழுதுகிறது.
நீ.....
குரலில் மட்டுமல்ல குருதியிலும்
பாடல் செய்கிறாய்.
குருந்து மரம் மட்டும் அல்ல
குருத்தெறியும் சிறுபுல்லும்
உன்குரலில் நிமிர்ந்து கொள்கிறது.
அடே புதுவை!
உன்னை ஆசிக்கும் தகுதி எனக்கில்லை.
வேரை உறுத்து விட்டு
தூரில் விழுந்தவன் நான்.
கூல்பிரியரில் வகை தேடுகிறேன்.
மேடை பாப்பிய வெண்பனிப் பரப்பும்
இலையுதிர்த்திய
மேபிள் மரங்களும்
பேனாக்கோடுகளாய்
அந்தமரங்களின் நிழல்களும்
என்னை ஆசுவாசப்படுத்த
என்னுடலத்தை அகல எழுதுகிறேன்.
நீயோ நிலம் எடுக்கும் அந்த
நெருப்பு மூச்சில் சுவாசம் செய்கிறாய்.
பிரபாகரம் என்னும் பிரவாகத்துள்
நீ ஊமாகிறாய்.
உனக்குள் நீயும் எனக்குள் நானும்
இருதுருவங்கள்.
நீ இருப்பவன்; நான் இறந்தவன்.
என்றாலும் நண்பா,
இருப்பவன் உனது மூச்சிலே தான்
இறந்த இவன் இன்னும் உயிர் வாழ்கிறான்.
புதுவை! எனக்கு நீ
ஒன்று மட்டும் செய்;
உன்மகள் விடுதலைக்கு வீடு வருவாள்.
அப்பொழுது அவளுக்குச் சொல்!
நிலமகள் அவளே என்பதாய்
இப்படிக்கு உன் ...

— புதியபாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அபத்தமும் அர்த்தமும்

## 2

பிரஞ்சு இருப்பியவாதிகளில் அல்பேர்ட் கம்யூ (ALBERT CAMUS, 1913-60) ஒரு வித்தியாசமான மனிதர். அவரது உலகப் பார்வையும் வித்தியாசமானது. தான் ஒரு இருப்பியவாதி என்பதை அவர் மறுத்துவந்தார். ஆயினும் இருப்பிய தத்துவத்தின் சிறப்பு பிரதிநிதியாகவே அவர் கருதப்பட்டார்.

கம்யூவை ஒரு தத்துவாசிரியர் என சித்திரிக்க முடியாது. இருப்பிய தத்துவம் பற்றி அவர் கனமான நூல்களை எழுதவில்லை. சொற்பமாக, சுருக்கமாக இரு மெல்லிய நூல்களில் (*THE MYTH OF SISYPHUS, THE REBEL*) தனது தத்துவப் பார்வையை விளக்கினார்.

**பிரம்மஞானி**

அவர் ஒரு எழுத்தாளர். இலக்கியப் படைப்பாளி. நாவல்கள், நாடகங்கள், சிறுகதைகளாக தனது வாழ்வனுபவத்தை எழுத்தில் வடித்தார். இளம் வயதில், 44 வது வயதில், இலக்கியத்திற்கான நோபல் பரிசு அவருக்கு கிடைத்தது.

அபத்தமான உலகில், அர்த்தமற்று வாழும் அபத்த நாயகனாக (*ABSURD HERO*) அவர் மனிதனைக் கண்டார். இந்த அபத்த மனிதனின் அவலமான, அர்த்த மற்ற, வாழ்வுபற்றி ஆக்ரோஷத்துடன் எழுதினார்.

கடவுள் இல்லாத உலகத்தில், நிச்சய மற்றதான வாழ்வில் மனித இருப்பிற்கு அர்த்தமென்ன? வாழ்வின் அர்த்தத்தை கண்டுகொள்ளாமல் வாழ்வதில் என்ன அர்த்தமுண்டு?

இந்தப் பிரபஞ்சம் மனிதனைப் படைத்திருக்கிறது. ஒரு விந்தையான பிராணியாக, விழிப்புள்ள ஜீவனாக, எதையும் விசாரித்தறியும் விவேகமுடையவனாக மனிதனை சிருஷ்டித்திருக்கிறது. இந்த அற்புதமான மனிதன் எதற்காகப் படைக்கப் பட்டான்? இந்தப் படைத்தலின் குறிக்கோள் என்ன? பிரபஞ்சத்திற்கும் மனிதனுக்கும் மத்தியிலான உறவு எப்படியானது?

மனிதன் விடைதேடி அலைகிறான். தெளிவுபெற விழைகிறான். ஆனால் மனிதனால் எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை. அறிய, அறிய, அறியாமை மேலோங்குகிறது. அபத்தத்தின் அலங்கோலம் தெரிகிறது. புரியப் புரிய, உலகம் புதிராக மாறுகிறது. தத்துவத் தேடல்களும், விஞ்ஞான விசாரணைகளும் மனித

www.tamilarangam.net



னுக்கு உண்மையைக் காட்டவில்லை. வாழ்வின் அர்த்தத்தை விளக்கவில்லை. பொய்மையின் சிதைவுகளாக, எங்கும் எல்லாம் அபத்தத்தின் அசிங்கமான முகம்தான் தெரிகிறது.

நான் தொட்டுணர்ந்து, பட்டறிந்து கொள்ளும் இந்த உலகம் எனக்குப் பரீட்சயமானது. இந்த மலையும் மரமும், கடலும் அலையும், நீலவானமும், நிலவும், நான் சதா சந்தித்துக்கொள்பவை. இந்தப் பூமி என்னை தோள்மீது சுமந்து திரிகிறது. நான் இந்த உலகத்தின் கனிகளைப் புசித்து வாழ்பவன். கணத்திற்கு கணம் நான் விழுங்கும் இந்தக் காற்றில் எனது உயிர் தொங்கி நிற்கிறது. இந்த உலகம்தான் எனது இருப்பிற்கு ஆதாரம். நான் இருப்பாக உயிர்த்து நிற்கிறேன். வாழ்வின் தீயாக எரிந்துகொண்டு இந்த உலகத்தின் மீது இச்சைகொண்டு நிற்கும் என்னை இந்தஉலகம் ஒதுக்கிவிடுகிறது.எனக்குபாரா முகம்காட்டுகிறது. பற்றற்றதாக நிற்கிறது. என்னிலிருந்து அந்நியப்பட்டதாக மௌன மாகநிற்கிறது. நான்வேர் அறுபட்டவனாக விழுந்துகிடக்கிறேன். எனது தேடுதல் பற்றியும், தடம்தெரியாது நான் எழுப்பும் அவல ஓலம்பற்றியும் இந்த உலகம் எவ்வித அக்கறை கொண்டதாகவும் தெரியவில்லை.

உணர்வற்ற, இலக்கற்ற, அர்த்தமற்ற உலகமும், உணர்வுள்ள, அறிவுள்ள, அர்த்தம்தேடும் மனிதனும், இரு துருவங்களாக, உறவுமுறிந்து, ஒத்திசைவு இழந்து, முரண்பட்டு நிற்கும் இந்த வாழ்வு அர்த்தமற்றது.

விடிகிறது. தினமும் விடிகிறது. திங்கள், செவ்வாய், புதன், வியாழன் என்று மாறி, மாறி, தொடர்ச்சியாக நாட்கள் விடிகிறது. விடியலுடன் நானும் விழித்துக்கொள்கிறேன். தினமும் தூங்குவதும், விழிப்பதும் வேலைக்கு ஓடுவதுமாக முடிவில்லாமல் நானும் விரைகிறேன்; நாட்களும் விரைகின்றன. அதே வேலை. பழக்கப்பட்ட, வழக்கமான அதே வேலை. சலிப்புத் தட்டத்தட்ட, இயந்திரமாக இயங்கி, இயங்கி, அதே வேலை. என்னோடு சேர்ந்து மற்றவனும் என்னைப் போல உழல்கிறான். அதே காலை, அதே பாதை, அதே வேலை, திரும்பத் திரும்ப பார்த்து அலுத்துப்போன அதே முகங்கள். நாட்கள் ஓடுகின்றன. நானும் ஓடுகிறேன். அர்த்தமில்லாமல், மீண்டும்மீண்டும், அதே வினையில், அதே விழைச்சலில், நான் ஓடிக்கொண்டே இருக்கிறேன்.

இயந்திர உலகில் வாழும் நவயுக மனிதனின் அலுப்புத் தட்டும் உழைப்பும், அவச வாழ்வும் அபத்தமானது என்கிறார் கம்யூ. கிரேக்க இதிகாசத்து பாத்திரமான சிசைப்பஸை (SISYPHUS) இந்த அசட்டுத்தனமான உழைப்பின் குறியீட்டுச் சின்னமாக அவர் சித்திரித்துக்காட்டுகிறார்.

தெய்வங்களின் கோபத்திற்கு ஆளாகிறான் சிசைப்பஸ். சாபம் கிடைக்கிறது. தண்டிக்கப்படுகிறான். மலையடிவாரத்திலிருந்து மலையுச்சிக்கு ஒரு கற்பாறையை தள்ளிச்செல்லும் கடூழியத் தண்டனை. பாறையை மேல்நோக்கி அவன் தள்ளிச் செல்ல, அந்தப் பாறை அதன் பழுவில் கீழ்நோக்கி உருண்டு விழுகிறது. தொடர்ச்சியாக, முடிவில்லாமல் முயற்சிக்கிறான். அவனது பகீரத முயற்சி, பயனற்ற முயற்சியாக மாறுகிறது. அர்த்தமற்ற, அசட்டுத்தனமான ஊழியம்செய்ய அவனுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. சோர்ந்துபோகாமல், இடிந்துபோகாமல், தெய்வங்களை சினந்தவாறு அவன் முடிவில்லாமல் முயற்சிக்கிறான். இந்த சிசைப்பஸ் கம்யூவின் அபத்த நாயகன். தற்கால மனிதனின் அபத்தத்தை குறியீடுசெய்யும் அக்காலத்து இதிகாச மனிதன்.

அபத்த நாயகனாக சித்தரிக்கப்படும் சிசைப்பஸிடம் ஒரு அபூர்வமான குணவியல்பைக் காண்கிறார் கம்யூ. தாங்கமுடி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாத துயரிலும் தளர்ந்துபோகாத உறுதிப் பாடு அவனிடம் இருந்தது. தனக்கு கிட்டிய விபரீத வாழ்வுபற்றியும் விசித்திரமான தண்டனைபற்றியும் அவன் விரக்தி கொள்ளவில்லை. கலங்கவில்லை. தெய்வத்தின் சாபமாக, விதியாக, தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தமாக தன்மீது சுமத்தப்பட்ட பழுவை, அபாரமான பொறுமையுடன் அவன் சுமந்து செல்கிறான். தனது வாழ்நிலையை ஏற்றுக்கொள்ளும் விழிப்புணர்வு அவனுக்கு ஏற்படுகிறது. துயரத்தின் அழுத்தத்தால் அவன் நசிபட்டுப் போகவில்லை. உறுதி தளராது தனது ஊழியத்தைத் தொடர்ந்தான். எட்டமுடியாத, சிகரத்தை நோக்கிய போராட்டத்திலும், அவனுக்கு ஒரு ஆன்ம திருப்தி இருந்தது என்கிறார் கம்யூ.

இந்தப் புராண காலத்து புனைகதையிலிருந்து நவீனயுக மனிதனுக்கு ஒரு அறநெறியை வரித்துக்காட்ட முனைகிறார் நூலாசிரியர்.

மனித வாழ்வு அபத்தமானது; துன்பம் நிறைந்தது; நிலையற்றது. இதுதான் இருப்பின் மெய்நிலை. இந்த இருப்புநிலையிலிருந்து எவரும் தப்பித்துக்கொள்ள முடியாது. இந்த வாழ்நிலையை மனிதன் துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும். தளர்ந்து போய் விழுந்துவிடாமல் எழுந்துநின்று வாழவேண்டும். வாழ்வில் அர்த்தமில்லை எனக் கண்டுகொள்ளும்போது சிலர் உயிரை மாய்த்துக்கொள்கிறார்கள். வாழ்க்கையில் அர்த்தமில்லாதபோதும் வாழ்க்கையை வாழத்தான் வேண்டும். வாழ்க்கையை முடித்துக்கொள்ளக்கூடாது. அபத்தத்திலிருந்து தப்பிக்கொள்ள தற்கொலையை நாடுவது பேடித்தனம். அது எவ்வகையிலும் நியாயமாகாது. கடவுள் இல்லாத உலகத்தில் மனிதன்தான் கடவுள். கடவுளிடமிருந்தோ, சுவர்க்கத்திலிருந்தோ மனித வாழ்வின் அர்த்தத்தைக் கண்டுகொள்ள முடியாது. மனித வாழ்வுக்கு மனிதனே அர்த்தத்தை கற்பிக்கவேண்டும். மனித செயலுக்கு மனிதனே அர்த்தத்தை கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனது அறிவுக்கு எட்டிய பார்வையுடன், தனக்கு கிட்டிய வாழ்நிலையை ஏற்று, அதில் திருப்திகொண்டு, எட்டமுடியாத எதிலும் இச்சைகொள்ளாது வாழமுடியுமாயின் அந்த வாழ்வு அவனுக்கு அர்த்தமுடையதாக அமையும் என்கிறார் கம்யூ. அபத்தத்திலும், அர்த்தமின்மையிலும், அர்த்தத்தை காண்பதுதான் அர்த்தமான வாழ்வாக அமையும் என்பது அவரது கருத்து. *MYTH OF SISYPHUS* என்ற அவரது தத்துவ நூல், மானிடத்திற்கு இந்தத் தரிசனத்தையே தருகிறது. வரண்டுபோன பாலைவனத்தின் மத்தியிலும் மனிதன் வாழவேண்டும், உழைக்கவேண்டும், படைக்கவேண்டும் என்பதே இந்த நூலின் மையக்கருத்து என்கிறார் கம்யூ.

உருவகக் கதைகளாக அவர் நாவல்களைப் படைத்தார். குறியீட்டுப்புனைகதைகள் மூலம் தனது தத்துவக் கருத்துகளை அழுத்திச் சொல்வது அவரது தனித்துவவித்துவம். கதாபாத்திரங்களும் இரத்தமும் சதையுமுள்ள மனிதர்கள் அல்லர். முகமற்ற கருத்துருவச் சித்திரங்கள்.

அந்நியன் (*STRANGER*) என்ற அவரது முதலாவது நாவல் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. அது ஒரு அபத்த மனிதனின் கதை.

வாழ்க்கையில் விரக்திகொண்டு, தன்னில் வெறுப்புக்கொண்டு, சமூகத்தில் ஒரு அந்நியனாக அலைகிறான் அந்தஇளைஞன். உணர்ச்சிகள் அவனிடம் செத்துப்போயிருந்தது. ஒரு தடவை, கடற்கரையோரம் ஒரு அரபு மனிதனை அவன் சுட்டுக் கொலை செய்கிறான். எதுவித காரணமுமின்றி, எதுவித நோக்கமுமின்றி, எதுவித உணர்வுமின்றி இந்தக் கொலையை செய்துவிடுகிறான். காவல்துறையினர் அவனைக் கைதுசெய்து விசாரிக்கின்றனர். நடந்ததை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒப்புக்கொள்கிறான். ஆனால் அந்த அர்த்தமற்ற செயலுக்கு அவனால் விளக்கம் கொடுக்க முடியவில்லை. இதனால் அவன் ஒரு பயங்கர கொலைகாரனாகக் காணப்படுகிறான். அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

சிறையில், மரணத்திற்காக காத்திருக்கும்போது ஒரு குருவானவர் அவனைச் சந்திக்கிறார். குருவானவர் அவனை மனம் மாற்ற முனைகிறார். அழியாத ஆன்மா பற்றியும், அடுத்த உலகம் பற்றியும் சொல்கிறார். விசுவாசித்தால் அடுத்த உலகில் விமோசனமுண்டுஎன்கிறார். நெருக்குவாரம் போடுகிறார். அவனுக்குஆத்திரம்எழுகிறது. முதற் தடவையாக உணர்ச்சி வெளிப்படுகிறது. அந்த ஆவேச உணர்வுடன் அவனுக்கு ஒரு வெளிச்சம் ஏற்படுகிறது. அந்த வெளிச்சத்தில் சாவுபற்றியதெளிவு பிறக்கிறது. சாவுடன் மனித வாழ்வு முற்றுப் பெறுகிறது என்ற ஞானோதயம் பிறக்கிறது. அந்த விழிப்புடன் வாழவேண்டும் என்ற தீவிர ஆசையும் பிறந்துவிடுகிறது. தூக்குக் கயிறு அவனுக்காக காத்திருக்கும்போது, சாவு கதவைத் தட்டும்போது, அவனுக்கு வாழ்வில் பற்று ஏற்படுகிறது. வாழவேண்டுமென்ற துடிப்பு ஏற்படுகிறது.

சாவு நிஜமானது. அடுத்த உலகமோ ஆதாரமற்றது. இந்த உலகமோ அபத்தமானது. ஆனால் வாழ்வுக்கு அர்த்தமுண்டு. வாழ்க்கையை வாழ்வதில் தான் அந்த அர்த்தமிருக்கிறது. இந்தக் கருத்தையே இந்த நாவலில் அழுத்திச் சொல்கிறார் கம்யூ.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது பிரான்ஸ் நாடு ஜேர்மனியின் ஆதிக்கத்திற்கு உட்படுகிறது. நாசிச ஆக்கிரமிப்பிற்கு எதிராகக் கிளர்ந்த பிரஞ்சு தலைமறைவு இயக்கத்தில் இணைந்துகொள்கிறார் கம்யூ. தலைமறைவு இயக்கத்தால் வெளியிடப்பட்ட *COMBAT* என்னும் பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்தார். போரும், சாவும், சிதைவும், அந்நிய படையெடுப்பும் அதற்கு எதிரான போராட்டமுமாக அவர் பட்டுணர்ந்த அனுபவத்திலிருந்து *PLAGUE* என்ற உருவக நாவலையும், *REBEL* என்ற தத்துவ நூலையும் எழுதினார்.

கொள்ளை நோய் (*PLAGUE*) போரையும் சாவையும் குறியீடு செய்கிறது. சாவை எதிர்க்கும் மனிதனின் அர்த்தமற்ற எத்தனிப்பையும் உருவகப்படுத்துகிறது. ஓரான் என்ற அல்ஜீரிய கரையோரப் பட்டினத்தை கொள்ளைநோய் திடீரென தாக்குகிறது. பட்டின வாசல்கள் அடைத்து மூடப்படுகிறது. சாவின் முற்றுகைக்குள் பட்டினம். நோயை எதிர்த்துப் போராட பட்டின வாசிகள் அணிதிரட்டப்படுகின்றனர். மனிதனுக்கும் சாவைப் பரப்பும் எலிகளுக்கும் போராட்டம் நிகழ்கிறது. ஒருவரோடு ஒருவர் தொடர்பற்று, உறவற்று, தனித்திருந்த பாத்திரங்கள் ஒரு பொதுவான பேரழிவில் ஒன்றுசேர்கின்றனர். பிரதான பாத்திரமாக ஒரு வைத்தியர், ஒரு பாதிரியார், ஒரு பத்திரிகையாளர், ஒரு தீவிரவாதி, ஒரு அதிகாரி என்ற ரீதியில் வேறுபட்ட பார்வையுடைய வேறுபட்ட மனிதர்கள் ஒரு நாசகார சக்தியை எதிர்கொள்கின்றனர். மற்றவர்களைவிட வைத்தியர் மிகவும் அவதானமாகநடந்துகொள்கிறார். சாவை தடுத்துவிட முடியாது; ஒத்திப் போடலாம். தப்பிப்பிழைப்பவர்கள் மீண்டும் சாவை சந்தித்துத்தான் ஆகவேண்டும் என்ற பிரக்ஞையுடன் பற்றற்றவராக பணிபுரிகிறார். கொள்ளை நோயை கடவுளின் தண்டனையாக காண்கிறார் பாதிரியார். அசிங்கமான மனிதனை தூய்மைப்படுத்தும் திருக்கூத்தாக சாவு சம்பவிக்கிறது எனப் பிரசங்கம் செய்துவந்த அவரைச் சாவு தீண்டிவிடுகிறது. நாவலில் கதையில்லை. ஒரு நெருக்கடி நிகழ்கிறது. மனிதர்கள் சந்திக்கிறார்கள். வார்த்தைகள் பரிமாறப்படுகிறது. அவற்றில் எண்ணங்கள் தெறிக்கிறது. 'கடவுள் இல்லாமல் ஒருவன் புனிதவாளனாக இருக்கமுடியுமா? இதுதான் இன்று என்னை அழுத்தும் முக்கிய பிரச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சனை' என்று ஒரு பாத்திரம் கேட்கிறது. ஆன்மீகமற்ற உலகில் அறம் சாத்தியமா என்ற கேள்வியை எழுப்புகிறார் கம்யூ. இறுதியில் நோய் தடுக்கப்படுகிறது. ஆனால் நோய்க்கிருமிகள் சாகவில்லை. அக்கிருமிகள் மீண்டும் மானிடரை தாக்கலாம். இரண்டாம் உலகப்போர்முடிந்துவிட்டது.ஆனால் போருக்கு காரணமான விஷக்கருத்துகள் சாகவில்லை. நாசிசமாகவோ, பாசிசமாகவோ அல்லது வேறு எந்தச் சித்தாந்தமாகவோ அந்தக் கருத்துக்கிருமிகள் மானிடம் மீது பேரழிவை ஏற்படுத்தலாம். இதுதான் மானிடத்தின் துயரயான இருப்புநிலையாக இந்த உருவகநாவலில் சித்தரிக்கப்படுகிறது.

கிளர்ச்சிக்காரன் (THE REBEL) என்ற கம்யூவின் தத்துவ நூல்அரசியல் உலகத்தை விசாரணை செய்கிறது.

கம்யூ ஒரு சமூக சீர்திருத்தவாதி. அநீதிக்கு எதிராக கிளர்ச்சி செய்வதை அவர் ஆதரித்தார். கற்பனாவாத கருத்துக்காக, சித்தாந்தத்திற்காக புரட்சி செய்வதை அவர் எதிர்த்தார். மதங்களையும், சர்வாதிகார அரசியற் சித்தாந்தங்களையும் அவர் கண்டித்தார்.

கடவுட் கோட்பாட்டில் எழுந்த மத நம்பிக்கைகள் ஒன்றோடு ஒன்று முரண்பட்டு மோதுகிறது. மதத்தின் பெயரால் மனிதன் மனிதனை அழித்து வருகிறான்.கலவரங்கள் வெடிக்கின்றன. தெய்வத்தின் பெயரால் யுத்தங்கள் நிகழ்கின்றன. நீண்ட நெடுங் காலமாக, மத யுத்தங்களால் இந்தப்பூமியின் மடியில் இரத்த ஆறுகள் ஓடியிருக்கின்றன. நித்தியத்துவம் என்ற கற்பனாவாதக் கருத்திற்காக மானிடம் பிளவுபட்டு மோதி தன்னையே சிதைத்துக்கொள்கிறது.

அரசியற் கருத்துலகிலும் வன்முறை வெடிக்கிறது. ஒரு கற்பனாவாதக் கருத்துக்காக புரட்சி வெடிக்கிறது. கருத்துப் போர் வர்க்கப் போராகி சமூக பிரளயங்கள் நிகழ்கின்றன. சித்தாந்தங்கள் யுத்தங்களில் முடிகின்றன.

கம்யூவின் இந்தத் தத்துவ நூல் மத சித்தாந்தங்களை மட்டுமன்றி, அன்றைய கம்யூனிச உலகையும் கடுமையாகச் சாடியது. இதனால் கம்யூனிஸ்ட் தோழர்கள் பலரது நட்பை அவர் இழக்கவேண்டி நேர்ந்தது. நீண்டகால நண்பராக இருந்த சாத்தர்கூட கருத்து முரண்பாட்டால் நட்பை முறித்துக்கொண்டார்.

அநீதிக்கு எதிராக, மனிதன் சுதந்திரம் வேண்டிப் போராடுவதையும் கிளர்ச்சி செய்வதையும் கம்யூ வரவேற்றார். அவர் குறிப்பிடும் கிளர்ச்சிக்காரன் அநீதிக்கு எதிரான சுதந்திரப் போராளி. அவன் அதர்மத்துக்கு எதிரான தர்மத்தின் தளத்தில் நிற்கிறான். மற்றவர்களது துன்பம் அவனைத் தீண்டுகிறது. அந்தத் துன்பத்தை காணும்போது அவனிடம் விழிப்புணர்வு ஏற்படுகிறது. அந்த விழிப்புணர்வால் துன்பப்படும் மற்றவர்களோடு தன்னை இனம் கண்டுகொள்கிறான். மனித ஆன்மத்திற்கு பொதுவான ஏதோ ஒன்று, மனித அவலத்தில் பிறக்கும் புலனாகாத ஒன்று, அவனையும் மற்றவர்களையும் ஒன்றிணைத்து விடுகிறது.

அநீதிக்கு எதிராக மக்கள் ஐக்கியப்பட்டு எழுச்சிகொள்வதை கிளர்ச்சிஎன்றும், ஒரு கருத்திற்கு வசப்பட்டு மக்கள் அணி சேர்ந்து எழுவதை புரட்சி என்றும் வேறுபடுத்தி,வகைப்படுத்திக்காட்டுகிறார் கம்யூ. முன்னதில் நீதி இருக்கிறது. தர்மம் இருக்கிறது. பின்னதில் உன்னதமானது ஒன்றுமில்லை என்பது அவரது வாதம். மனித சுபீட்சத்திற்காக மனிதன் போராடவேண்டும். அது அர்த்தமுடையது. அரூபமான, பூடகமான கருத்துகளுக்காக மனிதர்கள் போராடுவதும் மடிவதும் அபத்தமானது, என்கிறார் கம்யூ.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த தத்துவ நூலில் நீச்சேயை அவர் கண்டிக்கிறார். நீச்சேயின் தத்துவார்த்த கருத்துகள் சர்வாதிகார சித்தாந்தங்களுக்கு தூபமிட்டிருப்பதாக அவர் குற்றம் சாட்டு கிறார். கடவுள் இல்லாத ஒரு உலகத்தை சிருஷ்டிக்க முனைந்த நீச்சே, மனித அறங் களும் செத்துவிட்டதாகச் சொல்கிறார். இது தப்பு. இந்தக் கோட்பாடு அராஜகத் திற்கு வழிகோலும். கடவுள் இல்லாத உல கில், மனிதனே அறநெறிகளை வரித்துக் கொள்ளவேண்டும்; அர்த்தத்தைக் காண வேண்டும் என்கிறார் கம்யூ.

1960-ம் ஆண்டு, ஜனவரி 4ந் திகதி பாரிஸில் கார் விபத்தில் சிக்கி, அல்பேர்ட் கம்யூ மரணமடைந்தார். சாவு என்பது வாழ்வின் ஒரு அபத்த நிகழ்வு என எழுதி வந்த கம்யூ அந்த அபத்தமான சாவை இறுதியில் சந்தித்தார்.

மானிடத்தின் மனச்சாட்சியை கிள்ளி விட்ட ஒரு மகத்தான கலைஞர் என நோபல் பரிசு குழு அவரைப் புகழ்ந்துரைத்தது அவருக்கு கிடைத்த பொருத்தமான சான்றிதழ். (தொடரும்)

*(அடுத்த இதழில் ஜோன் போல் சாத்த ரின் தத்துவம் பற்றி எழுதுகிறார் பிரம்மஞானி)*

---

**'வெளிச்சம்'**
*கலை, இலக்கிய சமூக இதழ்*

*உருவாக்கம்:*
**ஆசிரியர் குழு**

*இதழ் அமைப்பு:*
**இணுவையூர்**
**சிதம்பர திருச்செந்திநாதன்**

*ஓவியம்:*
**தயா**

*புகைப்படங்கள்:*
**'பேபி போட்டோ'**

*அச்சு:*
**ம. மரியதாஸ்**

*வெளியீடு:*
**விடுதலைப்புலிகள்**
**கலை, பண்பாட்டுக் கழகம்**

---

வெளிச்சம் வாசகர்கள் மற்றும் படைப்பாளிகளிடமிருந்து வெளிச்சம் இதழ் பற்றிய ஆக்க பூர்வமான கருத்துக்களையும் படைப்புக்களையும் எதிர்பார்க்கின்றோம். போராட்ட உணர்வைச் சித்தரிப்பதுடன் போராட்ட கால வாழ்வையும், நிகழ்கால சம்பவங்கள், உணர்வுகளைப் பிரதிபலிக்கும் படைப்புகளையும் வெளிச்சம் வரவேற் கிறது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

*'வெளிச்சம்'*
*விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்*
*நடுவப் பணியகம்,*
*கோண்டாவில், யாழ்ப்பாணம்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கவிதை

வீ. பரந்தாமன்

எழுதிய

# வாருங்கள் வந்து பணியுங்கள்



வானத்து வெள்ளிகளை
வாங்கியிங்கு வைத்தாற்போல்,
நெய்விளக்கை ஏற்றி,
நிரைநிரையாய் வைத்திருப்பார்!
பூமாலை தொங்கும்;
புலிக்கொடிகள் நின்றாடும்;
மாவீரர் இல்லமெல்லாம்
மங்கலங்கள் பூத்திருக்கும்!
நேயமுள்ள வீரர்
நினைவுநாள் இன்றாகும்!

கார்முகிலால் போர்த்து
கதிரவனும் கண்திறவான்:
மாலைவரை வானத்தில்
மந்தாரம் மாறாது,
சோனா மழைபெய்யும்;
தூற்றல் தொடர்ந்திருக்கும்!

மேனி நடுங்கி
விறைத்து வெறியாட
ஊசிபோற் குத்தி
உயிருண்ணும் வாடைவரும்!
பாசி பிடித்த
பழந்தெருவில் கால்சுரிக்கும்!

கார்த்திகை மாதத்துக்
காரிருட்டு நள்ளிரவில்
போர்த்திறுக்கி மூடிப்
புறப்பட்டு வந்தவளே!
ஏனம்மா வாடி இரங்குகிறாய்?
சிங்களத்துக்
கூனற் குரங்குகளால்
கோலம் அழிந்தன்று
பூவோடு பொட்டிழந்து
போன உனக்கிவன்தான்

www.tamilarangam.net



காவலாய் நின்றஓரே கண்மணியோ?
சோராதே!

பல்லா யிரங்கல்லில்
பார்த்துநீ ஈன்ற அந்த
நல்லான் உறையும்
நடுகல்லைக் கண்டுபிடி!
நெய்விளக்கின் நல்லொளியில்
நீவிரும்பும் பிள்ளைதன்
மெய்யுருவம் கண்டால்உன்
மேனி சிலிர்க்குமே!

ஈக்கள் மொய் யாமல்,
எறும்பயலும் ஊராமல்,
தூக்கிமடி வைத்துச்
சுரந்தமுலை வாயூட்டி
கொஞ்சி வளர்த்த
குழந்தைமுகம் தோன்றுமே!
பிஞ்சு மழலைசொன்ன பிள்ளைமுகம்
தோன்றுமே!

கஞ்சி குடித்தாலும்
காடையர்கள் குண்டாலே
துஞ்சி மடிந்தாலும் தூயவளே!
உன்னை விட்(டு)
அஞ்சி அகன் றோடி
அயல்நாட்டார் கால்களிலே
தஞ்சமென்று வீழாதான்
தங்கமுகம் தோன்றுமம்மா!

ஈர விழியைத் துடைத்தே எழுந்திடுக!
போரில் பகைவெ...டி

பொன்னாட்டை மீட்கநின்ற
வீரன் திருமுகத்தை
வேண்டுமட்டும் பார்த்திடுக!

ஏ! ஏ! இனவெறிகொள்
சிங்களத்துக் கோழைகளே!
பாயும் புலிமறவர் பள்ளியிதாம்;
அஞ்சாமல்,
வாருங்கள்; வந்து பணியுங்கள்!
உங்களுக்கும்
வீரம் வரும்; மானம், வெற்றிவரும்!
இவ்வுலகில்
ஆரும் விரும்பும்
அறிவோடு பண்புவரும்!

ஊருக்(கு) உலகுக்(கு)
ஒருகால் இனிவாழும்
உங்கள் தலைமுறைக்கும் ஓதிவைப்பீர்!
ஈழத்தில்
சாவுக்கும் அஞ்சாத்
தறுகண் மறவர்தாம்
போருக்கு விற்பார்; புறமிடார்!
சொல்லி வைப்பீர்!

இன்னுமங்கே எஞ்சி இருப்போர்கள்
தாழாமல்,
வாருங்கள், வந்து, பணியுங்கள்!
நன்றே,
உயிர்பிழைப்பீர் சொன்னேன் உவந்து.

www.tamilarangam.net


ALDI

☐ தரமானவை ☐
☐ புதிதானவை ☐
☐ நீடித்து உழைப்பவை ☐

சகலவிதமான
கைக்கடிகாரங்கள்
சுவர்க்கடிகாரங்கள்
புதிய வகை
றேடியோக்கள்
விளையாட்டு உபகரணங்கள்
அழகுசாதனப் பொருட்கள்
இன்னும் பலவும்
அல்டி
யில் கிடைக்கின்றன

எல்லாவகையான
மணிக்கூடுகளும்
திருத்தம் செய்து
தருபவர்கள்

அல்டி
269/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



ALDI

அல்டி
269/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

*Prop: S. Shanmugathasan*